குடும்ப சிக்கனத்திற்கு
சிறந்தது
மில்க் வைற்
நீலபார் சோப்
மில்க் வைற்
வெள்ளை பார் சோப்.

Registerd as a Newspaper in Ceylon

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (12-4-66) இதழ் 64

விசுவாவசு பங்குனி 30 துல்ஹஜ் பிறை 20 செவ்வாய்க்கிழமை

விலை சதம் 20

பாலக்காடு ஆர் வி. ஜி. பீடிகள்
தரத்திலும், மணத்திலும்,
குணத்திலும் சிறந்த ஆர். வி, ஜி.
பீடிகளைக் கேட்டு வாங்கி
உபயோகியுங்கள்.

முக்கிய கவனிப்பு: சிலர் போலி பீடிகளை ஒறிஜினல் ஆர் வி. ஜி. பீடிகள் என விற்பனைசெய்கிறார்கள். எங்கள் வான் மூலம் மட்டுமே நாம் ஆர். வி. ஜி. பீடிகளை விநியோகம் செய்கிறோம். ஆதலால் வேறுகார்களிலோ பைசிக்கிள்களிலோ சிலர் விநியோகம் செய்யும் போலி பீடிகளை வாங்கி ஏமாறுதீர்கள்.

### மகாநாயகதேரோ, மந்திரி திருச்செல்வம், ஜி. ஜி.

# மூவருக்கும் வரவேற்பு அளிக்க தீர்மானம்

## யாழ்ப்பாணம் மாநகரசபை கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், செவ்வாய்

மல்வத்தை மடாதிபதி வண. மகாநாயகதேரோவுக்கும் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கும் ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. திருச்செல்வத்துக்கும் யாழ்ப்பாண மாநகரசபை வரவேற்பளிக்கவிருக்கிறது.

வடபகுதிக்கு முதன்முதலாக விஜயம் செய்யவிருக்கும் மல்வத்தை மடாதிபதி இராஜகுரு ஸ்ரீ விபாசி மகாநாயக்க தேரோவிற்கு பொது வரவேற்பளிப்பதென நேற்றுக் காலை நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகரசபையின் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எல்லா அங்கத்தவர்களும் கலந்துகொண்டார்கள். அங்கத்தவர்களின் ஆசனங்கள் புதிய முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

1965-ம் ஆண்டு இலங்கையின் சார்பில் ஐக்கியநாடு

4-ம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்துக்கு ஒரு "லக்சல"

### மந்திரி தஹநாவின் புதுவருடப் பரிசு

காலி, திங்கள்

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக, யாழ்ப்பாணம் நகரத்தில் அரசாங்கத்தின் உதவியுடன் உள்ளூர் உற்பத்தி பொருள் விற்பனவு நிலையமொன்று (லக்சல) விரைவில் திறக்கப்படவிருக்கிறது. இதற்கான ஆரம்ப வேலைகள் சில வாரங்களில் மேற்கொள்ளப்படுமென்றும் இரு மாத காலத்தில் நிலையம் செயல்படத் தொடங்குமென்றும் தெரியவருகிறது.

காலியில் ஒரு "லக்சல" நிலயத்தை திறந்துவைத்த உள்நாட்டு மந்திரி டாக்டர் டபிள்யு. தஹநாயக்கா இந்த விபரத்தை வெளியிட்டு, யாழ்ப்பாணம் மக்களுக்கு இதனை தமது புதுவருடப் பரிசாக அளிக்கப்போவதாக அறிவித்தார்.

மந்திரி டாக்டர் தஹநாயக்கா அப்பொழுது பேசுகையில், யாழ்ப்பாணத்தில் ஒரு 'லக்சல' திறக்கப்படுவதன்

(4-ம் பக்கம்பார்க்க)

### ஜன. 8-ந் திகதி வேலைநிறுத்தம்.

## "கூட்டாட்சி தொழிற்சங்கங்கள் கலந்துகொள்ளவில்லை"

கொழும்பு, திங்கள்

ஜனவரி 8-ந் திகதி நடைபெற்ற வேலைநிறுத்தம் சம்பந்தமாக இலங்கைதொழிற் சங்கங்களின் சம்மேளனம் இம்மாதம் 7ம் திகதி கூட்டிய மகாநாட்டில் கூட்டரசாங்கத்தின் ஆதரவுத் தொழிற்சங்கங்கள் பங்கு பற்றவில்லை என்று இ தொ. சங்கங்களின் பொதுக்காரியதரிசி திரு. எஸ். சண்முகதாசன் தெரிவித்தார்.

இது சம்பந்தமாகமாக திரு, என். சண்முகதாசன் பத்திரிகைக்கு விடுத்த செய்தியொன்றில்குறிப்பிட்டிருப்பதாவது,

தொழிற்சங்கங்களில் அரசியல் பாகுபாடுகளை நீக்கி, ஜனவரி 8-ந்திகதி தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட சம்பவங்கள்பற்றி ஆராய்வதற்காகவே எல்லாதொழிற் சங்கங்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தோம். கூட்டரசாங்க தொழிற்சங்கங்கள் எங்கள் அழைப்பை உதாசீனப் படுத்தி இப்பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றவில்லை. இச்செய்கை அத் தொழிற்சங்கங்களின் கட்சி சார்ந்த மனப்பான்மையை காட்டுகிறது.

இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், ஜ. தொ. காங்கிரஸ், இலங்கைமெர்க்கண்டைல் யூனியன், பதளை தொழிற்சங்க இணைப்பு சபை ஆகியவை இம் மகாநாட்டில் கலந்து கொண்டன.

## கிரேக்க எண்ணெய்க் கப்பலை பிரிட்டிஷ்யுத்தக் கப்பல் தடுத்தது

லண்டன், ஏப்ரல் 11

மொஸாம்பிக்யேரா துறைமுகத்திற்கு எண்ணெய் ஏற்றிக்கொண்டுசென்ற கிரேக்க எண்ணெய் கப்பல் ஒன்றை நேற்று பிரிட்டிஷ் கடற்படை யுத்தக்கப்பலினால் தடுத்துநிறுத்தப்பட்டு வேறு திசைக்கு மாற்றப்பட்டது.

இந்தக் கப்பல் ரொடீஷியாவுக்கு எண்ணெய் கொண்டு சென்றதென்றும் பேரா துறைமுகத்துக்கு 150 மைல் தூரத்தில் நிறுத்தப் பட்டதென்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

'மனுலா' என்ற இக்கப்பல் பேரா துறைமுகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொழுது பிரிட்டிஷ் யுத்தக்கப்பலொன்று அருகே சென்றதென்றும் அதன் பின்னர் பிரிட்டிஷ் கடற்படை அதிகாரிகள் அக்கப்பலுக்குள் பாய்ந்து வேறு திசைக்குச் செல்லுமாறு கப்பல் தலைவனுக்கு உத்தரவிட்டனரென்றும் இதனைத் தொடர்ந்து கப்பல் வேறு திசைக்குத் திருப்பப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டது.

இதுசம்பந்தமான விபரமான அறிக்கையை பிரிட்

(4-ம் பக்கம் பார்க்க)

## விமான விபத்து: 11பேர்பலி

சந்தியாகோ, ஏப். 11

அமெரிக்க கடற்படை விமானமொன்று பசுபிக்கடலில் நேற்று விழுந்ததில் அதிலிருந்த பதினொரு பேரும் பலியானார்கள் என்று அறிவிக்கப்பட்டது. இந்த விமானம் கடற்படைப்பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. (பி. டி. ஸி.)

## ரூ. 2 கோடி கோதுமை இலங்கைக்கு அமெரிக்கா வழங்கும்

கொழும்பு, திங்கள்

இவ்வருடம்செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி அமெரிக்கா இலங்கைக்கு 2 கோடி ரூபா பெறுமதியான [illegible] இலங்கைக்கு விரைவில் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுவருஷப்பிறப்பை முன்னிட்டு
விசேஷ மலிவு விற்பனை
தொலைபேசி: 7107. T'gram: GEEPEETEE.
புதுவருஷப்பிறப்பை முன்னிட்டு
புதிதாக இறக்குமதிசெய்த ஜவுளித் தினுசுகள்
ஞானபண்டிதன்
ஜவுளிக்கடை
228, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்
சில்க் சாறிகள், நைலெக்ஸ் சாறி, விம்பிரிக் சீத்தை,
நைலோன் சேட், திறம் பட்டு வேட்டி சால்வை செற்,
(150/- ல் இருந்து 200/- வரைக்கும்)
901 மல்வேட்டி ரூபா 8-40.
வாயில் சாறி ரூபா 13-25.
மற்றும் பிடவைத் தினுசுகளும் விலை சகாயமாக
(கூப்பன் இல்லாமல்)
பெற்றுக்கொள்ளலாம்.
இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்! (120)

வடமராட்சி வாழ் மக்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
C. W. E. புடவைகள் கூப்பனுடன்
கட்டுப்பாட்டு விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்
யாழ்ப்பாணம்
சீப்சைட்
(சி. டபிள்யூ. ஈ. அங்கீகாரம் பெற்ற புடவை வியாபாரிகள்)
பிரதான வீதி, — பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமொழிக்கு

உங்களிடம் இருப்பவற்றைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அது ஆத்மீகம் சம்பந்தப்பட்டதாகயிருக்கலாம். அல்லது அறநெறி சம்பந்தப்பட்டதாகயிருக்கலாம். பணத்தைத் தேடிக் குவிக்காதீர்கள். பிறருடைய ணத்தைக் கவர எண்ணுதீர்கள். பகிர்ந்து கொள்வதில் சமாதானமும் சந்தோஷமும் உண்டு.

— சுவாமிசிவானந்தர்

ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone; 589

யாழ் ... ஆனி பங்குனி மீ 30 உ (12-4-66)

# ஆஸ்பத்திரி நிலைமை

கொழும்பிலுள்ள லேடிரிட்ஜ்வே குழந்தைகள் ஆஸ்பத்திரியில் தாதிகள் பலர், நோயால் அவதியுறும் குழந்தைகளிடம் கவனம் செலுத்துவதில்லையென்றுப் குழந்தைகளைக் கவனிப்பதற்கு அவர்களின் பெற்றோர்கள் அனுமதிக்கப்படுவதில்லையாதலால் தாதிகள், குழந்தைகள்மீது அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமென்றும் கொழும்பு பெரியாஸ்பத்திரிக் கமிட்டிக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் பலர் தெரிவித்துள்ளனர் பண்டாரவளை ஆஸ்பத்திரியில் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு என்றும் அநுராதபுரத்தில் 'நவீனமுறையில்' ஆஸ்பத்திரியின் கட்டிடம் அமைந்திருந்தாலும் அங்கு சுகாதாரக் கேடு இருப்பதாகவும் புத்தளம் ஆஸ்பத்திரியில் சில கட்டிடங்கள் இடிந்து விழக்கூடிய நிலையிலிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைப் பொறுத்தவரையில் இவையெல்லாம் பழைய விஷயங்கள் பொதுமக்கள் செய்துள்ள புகார்களும் நாம் இப்பத்தியிலேயே தற்குமுன் எழுதியுள்ள தலையங்கங்களும் கொஞ்சமல்ல

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் புதியபுதிய கட்டிடங்கள், வளர்ந்துள்ளன. கட்டிடங்கள் வளரவளர நோயாளர் தொகையும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. நோயாளர் தொகைக்கேற்ப டாக்டர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. டாக்டர்களும் தாதிமார்களும் மற்றும் ஊழியர்களும் பெயரளவிலிருந்தாலும் ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர் விஷயத்தில் மனிதத்தன்மையுடன் நடந்துகொள்பவர் மிகக் குறைவு. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் டாக்டர்கள், தாதிகள், மற்றும் ஊழியர்கள், கட்டில்கள், கட்டிடங்கள் இருப்பினும் நோயாளருக்குத் தேவையான மருந்துகள் கிடைப்பதரிது. விலை குறைந்த மிகச் சாதாரண மருந்துகள்கூட வெளியிலேயே வாங்க வேண்டிய நிர்ப்பந்தம், எளிய நோயாளருக்கு ஏற்படுகிறது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் குழந்தைகள் சிகிச்சை நிலையத்தில், லேடிரிட்ஜ்வே ஆஸ்பத்திரியில் போன்று குழந்தைகளை உடனிருந்து கவனிப்பதற்குத் தாய்மார்கள் அனுமதிக்கப்படுவதில்லை. பிரசவ நிலையத்திலும்சரி, இதர பகுதிகளிலும்சரி நோயாளருக்கு உதவியாக உறவினர்கள் எவரும் அனுமதி பெற்று தங்குவதற்கு அப்பொழுது அனுமதிக்கப்படுவதில்லை. வெளிநாடுகளில் பயிற்சி பெற்று வைத்திய நிபுணர்களாக இங்கு வரும் டாக்டர்கள், தாங்கள் பயிற்சி பெற்ற நாடுகளில் உள்நிலைமையையும் தாங்கள் பெற்ற பயிற்சியையும் கருத்தில் கொண்டு இங்கு சில மாற்றங்களை ஏற்படுத்த முனைகின்றனர். இது நல்லதுதான். எனினும் வெளிநாடுகளில் உள்ள நிலைமை இங்கு இல்லை. தாதிகள் தங்கள் உறவினரைப்போல், நோயாளர்களை அங்கு கவனிப்பார்கள். இங்கும் அதுபோன்ற நிலை ஏற்படவேண்டும். தாதிகளும் மற்றும் ஊழியரும் தங்கள் கடமையைச் சரியாகச் செய்ய வேண்டும். இல்லையேல் நோயாளரைக் கவனிப்பதற்கு அவர்களின் உறவினரையாவது ஆஸ்பத்திரியில் தங்குவதற்கு அனுமதிக்க வேண்டும்.

## வடக்கு கிழக்கு ஓவர்சியர்கள் சங்கம்

### மந்திரியை விரைவில் சந்திக்க தீர்மானம

மாவிட்டபுரம், திங்கள்

அண்மையில் நடைபெற்ற வடகிழக்கு மாகாண ஓவர்சியர்கள் சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில், விரைவில் உள்ளூராட்சி அமைச்சரைச் சந்தித்துசம்பளம், பிரயாண அலவன்ஸ் முதலியன பற்றி பேச்சுக்கள் நடத்துவதென தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அமைச்சரிடம் சமர்ப்பிப்பதற்கென தயாரிக்கப்பட்டுள்ள மகஜரில தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

சம்பள உயர்ச்சி அளிக்கப்படுதல் வேண்டும். கிராம சபை வேலை மேற்பார்வையாளர் அல்லது வருமானவரி பரிசோதகர் போன்ற வேலைகளுக்கு மனுப்பண்ணும் பொழுதுகுறிடபிட்டதகமையுள்ள ஓவர்சியர்களின் கல்வித் தரத்தை நோக்காது ஐநது வருடசேவை முடிந்தவர்கள் மனுப்பண்ணவேண்டும் வேலை ஓவர்சியர்கள் அனைவரினதும் கல்வித் தரத்தை நோக்காமல் ஒய்வு நேரங்களில் தொழில் நுட்பக் கல்லூரியில் கட்டடப் பொறியியற்கல்வி பயில வசதியளிக்கப்படவேண்டும்.

உள்ளூராட்சி சேவையிலிருந்து இளைப்பாறும் சகல உத்தியோகத்தர்களுக்கும் இளைப்பாறும்வேதனம் ஆறு மாத காலத்துள் கிடைக்கக் கூடியதாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஐந்து வருட சேவையைப் பூர்த்திசெய்த கிராமசபை உத்தியோகத்தர்களையும் ஸ்தலஸ்தாபன கமிஷனுக்குள் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## இலங்கை மந்திரி

கராச்சி, ஏப்ரல் 11

இலங்கை உதவி நீதிமந்திரி திரு. மொகமட் நெனுமரிக்கார் நேற்று இங்கு வந்துசேர்ந்தார். பாகிஸ்தானில் ஐந்து நாட்கள் தங்கியிருப்பார். (பி. டி. ஸி.)

# பெண்ணின் 'காமரா வுக்குள் அகப்பட்ட மர்மப் பொருள்

## பறக்கும் தட்டு என்று சந்தேகம்

லண்டன், ஏப். 11

பறக்கும் தட்டுப்போன்ற ஒரு மர்மமான பொருளை பிரிட்டிஷ் பெண்மணி ஒருவர் தமது 'கமரா' மூலம் புகைப்படம் பிடித்திருக்கிறார். இப்பொருள் பறக்கும் தட்டாகவிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. விணவெளிக்கப்பல் மாதிரித் தோற்றமளித்த அந்தப் பொருள் பறக்கும்தட்டுப் போன்று தன்னை மாற்றிக் கொள்ளவும் தகுதிபெற்றிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றிய செய்தி இங்குள்ள பிரபல ஞாயிறு பத்திரிகையொன்றில் வெளியாகியுள்ளது.

38 வயதுள்ள திருமதி ஜோன் ஒல்ட்பீல்ட் என்ற பெண்மணி, 9.000 அடி (3,000மீட்டர்கள்) உயரத்தில் விமானமொன்றில் சென்றுகொண்டிருந்த பொழுதே 'ஒரு உருவம்' அவரது விமானத்தைதப்பின் தொடர்ந்ததென்றும் அப்பொழுது தப்வசமிருந்த 'காமரா'வினுல் அவர் படம் பிடித்ததாகவும் செய்திகூறுகிறது. இப்படங்கள் பத்திரிகையில் வெளியாகியுள்ளன

அந்தப்பொருள் நீளமான உருவம்பெற்றிருக்கிறது. தோற்றத்தில் பறக்கும்தட்டையொத்திருக்கிறது இந்த பொருள் அசுரவேகத்தில் சென்றுகொண்டிருந்த பொழுது படம்பிடிக்கப்பட்டதாகச் செய்தி கூறுகிறது.

(பி. டி. ஸி.)

## தப்பியோடிய அரசாங்க அதிகாரிகள்

### கி பாகிஸதானில் காவலில் இருக்கின்றனராம்

பம்பாய், ஏப்ரல் 11

மீஸோ கலகக்காரர்களினுல் சிறைபிடிக்கப்பட்ட இந்திய அதிகாரிகள் நான்கு பொலிஸ் உட்பட பத்துப் பேர், கிழக்குப்பாகிஸ்தான் முகாமொன்றிலிருந்து இந்தியாவுக்குத் தப்பியோடிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அஸாம்ராஜ்ய அரசாங்கஅதிகாரிகள்சுமார்70பேர்மீஸோ கலகக்காரர்களினுல சிறைபிடிக்கப்பட்டு கிழக்குப் பாகிஸ்தான் துப்பாக்கிப் படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் ஒரு முகாமில் காவலில் வைக்கப்பட்டிருந்தனரென்றும் கைதானவர்களில் அரசாங்கத்துக்கு விசுவாசமுடைய மீஸோ இளைஞர் ஒருவடும் இருந்தாரென்றும் செய்திகள் கூறுகின்றன.

(பி. டி. ஸி.)

## தமிழரசுக் கிளை நிர்வாகிகள்

பருத்தித்துறை, திங்கள்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் அல்வாய் வடக்கு பருத்தித்துறைக்கிளையின் நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

காப்பாளர்கள் திருவாளர்கள் எஸ். ஜே வி. செல்வநாயகம் எம். பி; க. துரைரத்தினம் எம். பி; தலைவர் திரு. ந. திருஞானசம்பந்தபிள்ளை, உபதலைவர்கள் திருவாளர்கள் கு. ஆ. சி. முருகுப்பிள்ளை, ச. சண்முகசுந்தரம், செயலாளர் திரு. ச. பாலச்சந்திரன், இணைச் செயலாளர்கள் திருவாளர்கள் ம. ஸ்ரீகந்தராஜ், த. பஞ்சாட்சரம், பொருளாளர் திரு. ச. மயில்வாகனம், இணைப்பொருளாளர்கள் திருவாளர்கள் வ. சிவசாமி, மா. நடராசா.

## பஸ் சேவை விஸ்தரிப்பு

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ சாவகச்சேரி— பருத்தித்துறை பஸ்சேவையை விரைவில் விஸ்தரிப்பது குறித்து ஆலோசித்துவருவதாகத்தெரியவருகிறது.

விஸ்தரிப்பின் அடிப்படையில் ஒரு பஸ் சாவகச்சேரியில் தங்கிஅதிகாலையில்புறப்படலாம் என நம்பப்படுகிறது.

## சிங்கப்பூருக்கு அங்கீகாரம்

ஜாகர்த்தா, ஏப். 11

சிங்கப்பூர் ராஜ்யத்தை பூரணமாகஅங்கீகரிபபதற்கு இந்தோனேஷியா முடிவு செய்திருக்கிறது. மலேஷியாவுடன் தனக்கிருக்கும் பூசல்களை இந்தோனேஷியா மிகைப்படுத்தி நெருக்கடியை ஏற்படுத்துவதாய் இருக்கலாமென்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

கணேசையர்

## தமிழ்ச் சங்கப் போட்டி முடிவுகள்

மாவிட்டபுரம், திங்.

மாவிட்டபுரம் கணேசையர் தமிழ்ச் சங்கத்தினர் தமது ஐந்தாவது தமிழ் விழாவை ஒட்டி நாடத்திய கட்டுரைப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அகில இலங்கை மாணவருக்கும் மலையக மாணவருக்கும் என இரு போட்டிகள் நடத்தப்பட்டன, போட்டிமுடிவுகள்வருமாறு:—

### அகில இலங்கைப்போட்டி

1-ம் பரிசு- செல்வம் பி. முத்தையன் (தமிழ்க் கலைகள்) ஹைலன்ஸ் கல்லூரி ஹட்டன் 2-ம் பரிசு- செல்வி சித்ரா பாலசுப்பிரமணியம் (தமிழ்க்கலைகள்) ஆலடி ஒழுங்கை, வல்வெட்டித்துறை. 3-ம் பரிசு- செல்வன்க. சண்முகம்பிள்ளை (நாவலர் தொண்டுகள்) 3-ம் பிரிவு, மண்டூர்.

### மலையகப் போட்டி

1-ம் பரிசு- செல்வி மகேஸ்வரி கிருஷ்ணன் (மலையகத்தில் வளரும்தமிழ்) பளியாவத்தைவீதி, டிக்கோயா. 2ம் பரிசு- செல்வன் சி. பன்னீர்ச்செல்வம், இறங்கலை.

## மலேசிய மகாநாட்டில் கலந்துகொள்வார்

மட்டக்களப்பு, செவ்.

மலேசியாவில் இம்மாதம் 16-ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் உலகத்தமிழ்ஆராய்ச்சி மகாநாட்டில் வித்துவான் வி, சீ. கந்தையாவும் கலந்துகொள்வார். மட்டக்கடப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம், விபுலாநந்தர்சபை ஆகியவற்றின் பிரதிநிதியாகக் கலந்துகொள்ளும் இவர் 15-ம் திகதி விமானமார்க்கமாக கோலாலம்பூர் செல்கின்றார்.

மலேசியா மகாநாட்டின் ... அங்கு செல்லும் வித்துவான் வி சீ. கந்தையா மகாநாட்டில் 'மட்டக்களப்புத்தமிழர் சமூக வரலாறு', மட்டக்களப்பு முஸ்லிம்களின்தமிழ்த் தொண்டு' ஆகியவை பற்றி உரைநிகழ்த்துவார். திரு. வி சீ கந்தையா அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மகாவித்தியாலய அதிபராவார்.

## நாட்டிலும் நகரிலும்

'மெல்லத் தமிழ் இனிச் சாகும்—அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்'... என்றந்தப் பேதை உரைத்தான். ஆ! இந்தவசை எனக்கெய்திடலாமோ? என்று பிரலாபித்த பாரதியார் இம்மாதம் 16-ம்திகதி கோலாலம்பூரில் நடக்கவிருக்கும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக்கு சமுகந்தந்து ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பிக்கவிருக்கும் பிறமொழியாளர்களின் பட்டியலைப் பார்த்தாரேயானுல் 'பலே, பாண்டியா! அடித்ததடா தமிழுக்குயோகம்! போவோமடா மலாயாவுக்கு நாமும்!' என்று ஆவேசத்தோடு குதித்தெழுந்துவிடுவார். என்ன செய்யலாம்? பாரதியார் அந்த விதமாக குதூகலித்து தமிழ் முழக்கம் செய்யுப காட்சியை நாம் காணக்கிடைக்காதவர்கள். ஆயினும் பாரதியார் மட்டுமன்றி, கம்பரும் சேக்கிழாரும், இளங்கோவும் வள்ளுவரும் நாவலரும் சொல்லின் செல்வரும்- இன்னும் எத்தனை எத்தனையோ தமிழ் வளர்த்த செம்மல்களும் ஆவி ரூபத்திலாவது சமுகம் தந்து தமிழாராய்ச்சி மகாநாட்டைக் கண்டு களித்து ஆர்ப்பரித்து ஆசி கூறப்போகிறுர்கள்.

இம்மகாநாட்டில் பங்கு பற்றும் பிறநாட்டினரையும் அவர்கள் செய்யும் விஷயதானத்தையும் பாருங்கள்

திரு. ஹெல்கா அன்ரல், ஹம்போல்ட் பல்கலைக்கழகம், பேர்லின்-'தமிழ் இலக்கியஅபிவிருத்தி பற்றிபாரதியின் அபிப்பிராயங்கள்' திரு. க்ளோஸ் ஜனேட், இந்தியவியற் கழகத்தலைவர், கோலோன், ஜேர்மனி- 'சேர நாட்டையும் கேரளத்தையும் பற்றிய ஆராய்ச்சிகள்' திரு. வி. மக்கரென்கோ, சிரேஷ்ட ஆசிரியர், அகராதிகள் பதிப்பகம், ரஷ்யா-'தென்கிழக்காசிய மொழிகள் தமிழிடம் கடன்வாங்கிய சொற்கள்' பேராசிரியர் கார்ல் கெல்லர், லோசான்பல்கலைக்கழகம், சுவிற்சலாந்து- 'திருமுருகாற்றுப்படை இலக்கிய திறனுய்வு'

பேராசிரியர் கிளாரன்ஸ் கிளிக், ஹாவாய் பல்கலைக்கழகம்-'பீஜி தீவுகளில் இந்தியரின் நிலைமை'.

திரு. பிரேண்டா பெக், மனிதவரலாற்று ஆராய்ச்சியாளர், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம்-'கோயம்புத்தூர் மாவட்டத்தில் இன வித்தியாசங்கள்' டாக்டர் ஜூலியன் ரொன்ட்ரியோ, ரோயல் சரித்திர, நுண்கலை நூதனசாலை அதிபர்-'பழங்கால ஆரியயோக தத்துவத்தின் மீதும் பதஞ்சலியின் சீர்திருத்தத்தின் மீதும் திராவிட செல்வாக்கு'. துர்ப்பாக்கிய வசமாக இவ்வறிஞர்கடந்த ஜனவரிமாதம் நிகழ்ந்த விமான விபத்தில் காலமாகிவிட்டார்.

கோலாலம்பூர் மகாநாட்டின் தமிழ் ஆராய்ச்சிகள் வெவ்வேறு பிரிவுகளாக நடைபெறும்- இலக்கியம், சமூகவரலாறு, தமிழ்மொழி தென்கிழக்காசிய கலாச்சாரம், மொழிபெயர்ப்புதிட்டங்கள்.

பிரேக் நகரத்தில் ஓரியன்டல் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் கமில ஸ்வெலபில் தமிழ்மொழி பிரிவுக்கு தலைவராயிருப்பார். இப்பிரிவில் தமிழரல்லாதவர்களுக்கு தமிழ் கற்பித்தல், தமிழ்ப் பாடப் புத்தகத் தொகுப்பு' தென்கிழக்காசியாவில் பொது மொழித் தொடர்புகள், தமிழுக்கு ரோமன் எழுத்துக்கள்போன்ற விஷயங்கள ஆராயப்படும். 'கல்கி' பத்திரிகையில் பல கட்டுரைகளும் கதைகளும்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## அறிவித்தல்

விடத்தற்பளை ஸ்ரீ கணேசானந்த சமூக சேவா சங்க நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டு.

எதிர் வரும் 14-4-66ல் இழுக்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச்சீட்டு தவிர்க்கமுடியாத சிலகாரணங்களினால் 26-4-66ல் அதிர்ஷ்டம் பார்க்கப்படும். 123




## அறிவித்தல்

வண்ணார்பண்ணை சிவன் கோவில் காணிகளுக்கு வாடகைப் பணம் பாக்கியில்லாமல் கட்டத் தவறுபவர்கள்மீது சட்டமூலமான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ. தனபாலசிங்கம்,
ஆனைப்பந்தி,
தேவஸ்தான வழக்கறிஞர். 124

## கல்வி

ஆசிரிய பயிற்சி விண்ணப்பத்திற்கு 5 பத்து சத முத்திரை அனுப்பவும். வர்த்தகக கல்வி நிலையம், திருநெல்வேலி. 125

REGAL—JAFFNA
NOW SHOWING!
Jack Palance
Anita Ekberc
in
THE MONGOLS
(Supertotal scope - Color)

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
பாரத நாட்டின்
வீரபுத்திரன்
4-45க்கு மட்டும்
TWIST ALL NIGHT

நியூ காலிங்கஸ்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி
நடித்த
எங்கள் வீட்டுப்பிள்ளை

இப்பொழுது
வெற்றிமுரசு கொட்டுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரெலியா)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனோரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
ஸ்ரீ விஜயலக்ஷ்மிபிக்சேர்ஸ
நவராத்திரி




## கொழும்பு

செவ்வாய் 12 - 4 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-15 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 தமிழோடிசைப்பாடல், 8-00 பௌத்தவாசம், 8-15 ஞானமிர்தம்.

344 மீற்றர் & 49 மீற்றர்

8-30 முத்திநெறி—சைவ சஞ்சிகை, 9-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 தேர்ந்த இசை, 11-30 சிறுவர்மலர். பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 இசை மெட்டுகள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை, 7-15 ஐ. நா. உரைச்சித்திரம், 7-30 குதூகலம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நாதஸ்வரம், 10-00 நேயர்விருப்பம்.

## கலை விழா

பருத்தித்துறை, திங்கள்

புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் நான்காவது ஆண்டுவிழா எதிர் வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஞானசம்பந்தர்கலைமன்ற மண்டபத்தில் நடைபெறும். காலைநிகழ்ச்சிகளில் கூட்டுப்பிரார்த்தனை, பஜனை சொற்பொழிவுகள் இடம் பெறும்.

மாலை நிகழ்ச்சியில் இசை விருந்தும், நாட்டியம், நடனம், நாடகம் முதலியனவும் இடம்பெறும்.

பிரதம விருந்தினர்களாக மாவட்ட நீதிபதி திரு. எம். எம். அப்துல்காதர், திருவாவாளர்கள் ஏ. சி. விஸ்வநாதன், கே. துரைரத்தினம் ஆகிஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

## சமாதான நீதவானுக நியமனம்

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறை மாதனையைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. வி. தர்மலிங்கம் பருத்தித்துறை நீதிபரிபாலனப் பிரிவுக்கு சமாதான நீதவானுக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் பருத்தித்துறை நீதிபதி திரு. ஆர். டி சில்வா முன்னிலையில் சமாதானநீதவானுக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட இவர் சமுகசேவையாளர்களுள்ஒருவர்என்பதுடன் பருத்தித்துறை நகரசபைக்கு மாதனை வட்டார அங்கத்தவராயும் இருந்தவர் என்பது குறிப்பிடக்கூடியதாகும்.

## பிரவேசங்கள்

ஜி. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/ வர்த்தகம், உயர்தரம் கலை/ விஞ்ஞானம், பிறெப்! விஞ்ஞானம் வகுப்புக்களுக்கு இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படும். விடுதி வசதிகள் உண்டு.

ஐக்கியகலாசாலை
நெல்லியடி, கரவெட்டி/
107, பருத்தித்துறைவீதி,
நெல்லியடி, யாழ்ப்பாணம்.

# வரி விளம்பரம்

## தேவை

கொழும்பிலுள்ள ஒரு தமிழரின் குடும்பத்துக்கு அனுபவமுள்ள சமையல் பெண் தேவை. தகுந்த ஊதியம் அளிக்கப்படும். விளம்பர இல. 30, ஈழநாடு மே. / பா. என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

உடுவில் தென் கிழக்கு ஐக்கிய பண்டகசாலை மனேச்சர் பதவிக்கு விண்ணப்பிப்போர் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கமைய செயலாளருக்கு 23-4-66ற்கு பிந்தாது விண்ணப்பிக்கவும். கனிஷ்ட தராதரம் சித்தியடைந்தவராய், கூட்டுறவுப் பகுதி 4 மாதப் பயிற்சி சித்தியடைந்தவராய், 25க்கும், 40க்கும் இடைப்பட்ட வயதினராயும், பிணை ரொக்கம் 1000/-மும், ஆதனம் ரூபா 2500/-ம் கொடுக்கக்கூடியவராயும், மூன்று நற்சாட்சிப் பத்திரங்களுடனும் இருத்தல் வேண்டும். சம்பளம் மாதம் ரூபா 120/-. வருடம் ரூபா 7-50 சம்பள உயர்வாய் 10 வருடங்களுக்குக் கொடுக்கப்படும். 203

எல்லா வகைக் கணக்குகளும் திறமையாக எழுதி முடித்துக் கொடுக்கப்படும். தேவைக்கு எழுதுக. S ஷண்முகசுந்தரம், 18, லோட்டஸ் ரோடு, வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். 207

தேர்ச்சியுள்ள நெசவுத் தொழிலாளர்களும் ஆசிரியைகளும் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும். காலை 10-11 மணிக்கிடையில் 246, உள்ளூர் உடை உற்பத்தித் தொழில் ஸ்தாபனம், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 8

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உவைமன் ரோட்டில் நான்கு பரப்பு நிலத்தில் மின்சாரம் குழாய்த் தண்ணீர் முதலிய நவீன வசதிகளுடன் நான்கு அறைகளும், இரண்டு இணைக்கப்பட்ட குளிக்கிற அறைகளும் சாமான் அறையும் குசினியும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு — 40, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 205

## விற்பனைக்கு

ஒஸ்டின் லொறியின் பாவித்த மரபொடி மட்டும் விற்பனைக்குண்டு. மில்க் வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 201

6 X 70 X 15 பாவித்த ரயர்கள் விற்பனைக்குண்டு. மில்க்வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 50

2 கடையும் நிலமும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: பொ. குமாரவேலு, மெயின் வீதி, பண்டைத்தரிப்பு. 206

## வாடகைக்கு

கே. கே. எஸ். வீதியில் 504-ம் நம்பர் வீடு (தட்டா தெரு) (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் லேடிஸ் கொலிச்சுக்கும், சமீபத்தில்) எல்லா வசதிகளுடன் வாடகைக்கு இருக்கிறது. விபரங்கட்கு: S. K. சேனதிராசா, சேனதிராசா நகைமாளிகை, கொக்குவில் கிழக்கு. 202

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## எம். பி. தலைமையில் சிரமதானம்

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறை தமிழரசுக்கட்சி வாலிபர் முன்னணியினர் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் தலைமையில் பருத்தித்துறை கடற்கரை மயானத்தைச் சிரமதான முறையில் சுத்தம் செய்தனர்.

இந்தச் சிரமதானப்பணியில் உடுப்பிட்டித் தொகுதி தமிழரசுக் கட்சிக்கிளைத் தலைவர் திரு. க. ஜெயக்கொடி உட்பட பருத்தித்துறை, அல்வாய் வடக்கு, இன்பருட்டிப் பகுதித் தொண்டர்களுடன் மாணவர்களும் ஈடுபட்டனர்.

கோயில் தேவைகளுக்கும் விவாகம் முதலிய
விசேஷ வைபவங்களுக்கும் உபயோகமான
அபிஷேகசந்தனம்
கோயில் அபிஷேக தீரவியங்கள்,
வாசனை மீக்க பன்னீர்
பரிமளம் நிறைந்த சந்தன வில்லைகள்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிரதர்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
73, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்

வடமாகாணத்தில்
இரவு - பகல் சேவை செய்யும்
ஒரே ஒரு
ஸதாபனம்
உவாட் அன் டேவி
( ஆங்கில மருந்துச்சாலை )
148, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் இன்னிங்ஸில்

# யாழ். தெரிவுக் கோஷ்டி 135 தமிழ் யூனியன்: 248

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணப் பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டிக்கும் கொழும்பு தமிழ் யூனியன் கோஷ்டிக்குமிடையில் நேற்று நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண தெரிவுக் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. யாழ்ப்பாண கோஷ்டியின் காப்டன் கணேஷ்குமார் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 39 ஓட்டங்களைப் பெற்றார்.

கொழும்பு தமிழ் யூனியன் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட் நஷ்டத்துக்கு 248 ஓட்டங்களைப் பெற்றது காசிச்செட்டி, பாளி ஆகியோர் முறையே 36, 47 ஓட்டங்களைப் பெற்றனர். தோமஸ், சி. எச். குணசேகரா ஆகியோர் சிறப்பாக துடுப்பெடுத்தாடினர். இவர்கள் ஆட்ட முடியும் வரை முறையே 42, 81 ஓட்டங்களை பெற்றனர். தொடர்ந்து ஆட்டம் இன்று 12 மணிக்கு ஆரம்பமாகும்.

## மரண அறிவித்தல்

சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த திருமதி ஆச்சிமுத்துப் பிள்ளை அம்பலவாணர் காலமாகிவிட்டார். இவர் கு. அம்பலவாணரின் (ஓய்வு பெற்ற ஆசிரியர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) அருமை மனைவியும், இராமசாமி, பரமேஸ்வரி, மனோன்மணி ஆகியோரின் தாயாரும், பொ. சோமசுந்தரம் (அரசாங்க சேமிப்புபகுதி (கொழும்பு), வே. கந்தையா (ஆசிரியர், மகாஜனக் கல்லூரி தெல்லிப்பளை), திருமதி சிவயோகம் இராமசாமி ஆகியோரின் மாமியாருமாவர். அன்னாரது பூதவுடல் மயிலணியிலுள்ள இல்லத்திலிருந்து சுன்னாகம் மயானத்திற்கு ஈமைக்கிரியைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை (12-4-66) காலை 10 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். 209

## யாழ்ப்பாணத்தில்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் யாழ்ப்பாணப்பகுதி மக்கள் மிகுந்த பலனை அடைய முடியுமென்று கூறினார்.

யாழ்ப்பாண குடாநாட்டு மக்கள் தாங்கள் தயாரித்த, உற்பத்தி செய்த பொருள்களை இந்த நிலையத்தின் மூலம் விற்பனை செய்யலாமென்றும் குடிசைக் கைத்தொழில்களை ஊக்குவிக்கவும் இத்துறையில் ஈடுபட்டவர்கள் தங்கள் பொருள்களை விற்பனை செய்து பலனடையவும் வாய்ப்புக் கிடைக்கிறதென்றும் மந்திரி தஹநாயக்கா தெரிவித்தார்.

புதிய ஏற்பாட்டின் மூலம் யாழ்ப்பாணத்துப் பொருள்களை மற்றைய பகுதுகளில் வாழும் மக்கள் வாங்க முடியுமென்றும் அவர் கூறினார்.

## எண்ணெய் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'டிஷ் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் பிரதம காரியதரிசி யுதாண்டுக்குச் சமர்ப்பித்துள்ளது.

றொடீஷியாவுக்கு எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல்களை தடுக்கத்தேவைபபடின் பலாத்காரம் பிரயோகிக்கலாம் என்று ஐ. நா. அங்கிகாரம் வழங்கிய சில மணி நேரத்துக்குள்ளாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இக் கிரேக்கக் கப்பலின் ஏஜன்ஸியான பிரான்ஸ் அதிகாரிகள் பிரிட்டனின் நடவடிக்கைகுறித்து கவலை தெரிவித்துள்ளனர். பிரிட்டிஷ் எதிர்க்கட்சியினரான கான்ஸர் வேட்டியினர் 'தீவிரமான நடவடிக்கை, என்று எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

## மூவருக்கும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் சபை தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்று சிறந்த முறையில் சொற்பொழிவாற்றிய யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு, யாழ்ப்பாணம் மாநகரசபை சாரிபில் பொது வரவேற்பு அளிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

திரு. ஏ ஜி ராஜசூரியர் பேசும்போது, ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்திற்கு கூட வரவேற்பு அளிக்க தீர்மானித்தால் ஒத்துழைப்போம் என்றும் கூறினார்.

நல்லூர் முத்திரைச்சந்தி மைதானத்தில் அரசாங்கக் கல்விக் கந்தோர் கட்டும் வேலையை காலந்தாழ்த்தாது உடனடியாக நடவடிக்கைக்கு எடுக்கவேண்டும் என்றும், குறித்த கல்விக் கந்தோர் கட்டுவதற்கு தடுக்கப்பட்ட நடவடிக்கைகள் முறையற்றதாக இல்லாததினால் இவ்விஷயத்தில் கல்வி அமைச்சரும் யாழ்ப்பாணம் எம். பி.யும் கூடிய கவனம் எடுத்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் திரு. அ. நடராசாவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது, ஆதரவாக 9 வாக்குகளும் எதிராக 6 வாக்குகளும் கிடைத்து நிறைவேறியது.

முதலாம் வட்டாரத்திலுள்ள முதலாம் குறுக்குத் தெருவிற்கு ஆர். ஆர். நல்லையா வீதி என்று பெயரிட வேண்டுமென திரு ரி எஸ் துரைராஜாவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தேசிய அரசாங்க மந்திரி சபையிலுள்ள ஒரு தமிழ் மந்திரியான ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்துக்கு, மாநகரசபை சார்பில் பொதுவரவேற்பு அளிப்பதென ஹாஜி வி. எம். எம். அபுசாலியால் கொண்டுவரப்பட்ட அவசர பிரேரணை நீண்டநேரவிவாதத்தின்பின் நிறைவேறியது

திரு. நாகராசா அவசர பிரேரணையை நான்கு நாட்கள் முன்னறிவித்தல்கொடுக்கவேண்டுமெனக் கூறினார்.

திரு எஸ். சி. மகாதேவா பேசும்போது, இப்பிரேரணை முறையாகக் கொண்டுவரப்படவில்லையெனக் கூறினார்.

இப்பிரேரணைக்கு எதிராக தான் வெளிநடப்பு செய்வதாக திரு. என். ரி. செல்லத்துரைகூறிவெளிநடப்புசெய்தார்.

இப்பிரேரணையின்வாக்கெடுப்பில் கலந்து கொள்ளப் போவதில்லையென திரு. எஸ் சி. மகாதேவா கூறினார். திரு. எஸ். அழகையா, திரு. நாகராசா, திரு அந்தோனிப் பிள்ளை, திரு சேவியர், திரு எஸ். சி. மகாதேவா மேற்கண்ட பிரேரணையை எதிர்த்து வெளிநடப்புசெய்தனர்

கூட்டவிதிகளின் உபபிரிவு 9ம் இலக்கத்தின்படி முன்னறிவித்தல் கொடுத்துஎந்த அங்கத்தவரும் தீர்மானம் கொண்டுவரலாம் என்றும், அதன்படியே தான் மேற்கண்ட தீர்மானத்தைஏற்றுக் கொண்டதாக மேயர் துரையப்பா தெரிவித்தார்

மேற்கண்டதீர்மானத்தை தான் எதிர்ப்பதாக திரு ஏ துரைராஜசிங்கம் கூறினார்

## கால்நடைகளுக்கு நோய்

பருத்தித்துறை, திங்கள் கடும்வெப்பம் காரணமாக இப்பகுதியில் கால்நடைகளுக்கு ஒருவகை நோய்பீடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இந்நோய்காரண [illegible] கின்றன.

## யாழ். 'கிறீன்பீல்' வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்' கிரிக்கெட் கோஷ்டிக்கும், கொழும்புக்கிளை 'கிறீன்பீல்' கிரிக்கெட்கோஷ்டிக்குமிடையில் யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் மைதானத்தில் நடைபெற்ற ஒரு இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் கிறீன்பீல் 23 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றிபெற்றது. கொழும்புக் கோஷ்டிக்கு திரு. பற்றிக்கும், யாழ். கோஷ்டிக்கு திரு. அலோசியசும் தலைமைதாங்கினர்.

## நாட்டிலும் நகரிலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுதியவர் டக்டர் ஸ்வெலபில்.

இன்னொரு பிறநாட்டறிஞரான லண்டன் பல்கலைக்கழகத்து டக்டர் ஆஷர் மொழிபெயர்ப்புத் திட்டப் பகுதியின் காரியதரிசியாவர்.

மலாயா பல்கலைக்கழகத்து மலாய் விரிவுரையாளர் டக்டர் இஸ்மெயில்ஹுசெயின் திருக்குறளை மலாய் மொழியில் பெயர்க்கும் முயற்சியை மேற்பார்வை செய்வார்.

மலாயா பல்கலைக்கழகத்தில் சீன மொழி பேராசிரியராகிய திரு. ஷோ பெங் யோகே 'கிழக்காசியாவில் இந்திய விஞ்ஞானம்' என்ற பொருள்பற்றி ஓர் ஆராய்ச்சிக்கட்டுரை சமர்ப்பிப்பார்.

இந்தியாவிலிருந்து சென்னை முதன் மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் தலைமையில் 45 பேராசிரியர்களையும் அறிஞர்களையும் கொண்ட ஒரு தூதுகோஷ்டி இம்மகாநாட்டுக்கு செல்கிறது. பதினைந்து பேர்கொண்ட ஓர் இலங்கை தூதுகோஷ்டியும் செல்கிறது.

--வழிப்போக்கன்

## எதிரிகள் சரணடைந்தனர்

மாவிட்டபுரம், திங்கள்

சென்ற வியாழக்கிழமை இரவு தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த முதலி சின்னவன் என்பவர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக சுன்னாகம் பொலிசாரால் தேடப்பட்டுவந்தவர்களான ஆண்டி முதலி, நீலன் முருகன், நாகன் மாதன், ஆண்டி கதிரன், ஆண்டி சடையன், ஆண்டி ஆறுன் ஆகிய ஆறுபேரும் நேற்று தமது வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் மூலம் மல்லாகம் நீதிபதியின் வாசஸ்தலத்தில் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துருபாறு முன்னிலையில் சரணடைந்தார்கள். நீதிபதி சந்தேக நபர்கள் ஆறு பேரையும் இம்மாதம் 17-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். முதலி சின்னவனின் மரணம் சம்பந்தமாக ஏற்கனவே மரணவிசாரணை நடத்திய நீதிபதிமேற்கூறிய ஆறு நபர்களையும் கைது செய்ய வாரண்ட் உத்தரவு பிறப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களின் சுற்றுப்பிரயாணம்

யாழ்ப்பாணம், செவ்.

பரமேஸ்வராக்கல்லூரியை சேர்ந்த 58 மாணவர்களும் நான்கு ஆசிரியர்களும் இம் மாத முற்பகுதியில் மிகிந்தலை, சிகிரியா, கண்டி, சிவனொளிபாதமலை, நுவரெலியா, பதுளை, இகினியாகலை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களுக்குச் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டு திரும்பினார்கள்.


புத்தாண்டு விழாவை

புனிதமாகக் கொண்டாட

புதியதோர் சந்தர்ப்பம்

C. W. E.

புடவைகளும்

கண்ணைக்கவரும் வர்ணங்களில்

லேடி ஹமில்ட்டன் கிறேப் சில்க் சாறிகளும்

97-ம் இலக்க

கூப்பனுக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

"ராஜ்கோபால்ஸ்"

36/1, பெரியகடை -- யாழ்ப்பாணம்,

போன்: 7168



(C.W.E) கூ. மொ. வி. ஸ்தாபனத்தாரின் புடவைகள்

கூப்பனுடன் கட்டுப்பாட்டு விலைகளுக்கே

பெற்றுக்கொள்ளலாம்.

இத்துடன்

எமது சொந்த தறிகளில் தயார் செய்த

கைத்தறிச் சேலைகள்

மலிவு விலைகளில் கிடைக்கும்.

சண்முகானந்தா

ரெக்ஸ்ரைல்ஸ்

58, பெரியகடை, போன்: 7232 யாழ்ப்பாணம்.



Estd: 1929 S. R. S. போன்: 296

ஜவுளி மாளிகையில்

C. W. E. புடவைகள்

★ 100ம்- நம். டக்கா சேலை

★ 100-ம் நம். 7 யார் சேலை

★ கைத்தறி சேலைகளும்

வேண்டிய டிசைன்களில்

நிதானமான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:- செவ்வாய், புதன் கிழமைகளில் (12-4-66, 13-4-66) வழமைபோல் விற்பனை நடைபெறும்.

எஸ். ஆர். செல்லத்துரை

216, கே. கே. எஸ். ரோட், — யாழ்ப்பாணம்.



The Jaffna Co-operative Stores Ltd.

யாழ்ப்பாண

ஐக்கிய வியாபாரச் சங்கம்

420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம.

கூப்பனுக்கு C. W. E. பிடவைகள்

எமது பிடவைப் பகுதி வாடிக்கைக்காரர்களின் வசதிக்காக

12-ம் திகதி செவ்வாக்கிழமையும்

13-ம் திகதி புதன்கிழமையும்

திறந்திருக்குமென்பதை

மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

2x4

126


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு வார மலர்,

## நானும் நீந்துவேன் !



மிகிர் சென் மட்டும்தானு பாக்கு நீரிணையை நீந்திக் கடந்தவர்! நானும் நீந்துவேனே! ஆழ்கடலை நீந்துவதற்குப் பயிற்சி பெற்ருல் மட்டும் போதாது. வாழ்க்கைக் கடலையும் நீந்துவதற்குப் பயிற்சி பெறவேண்டும் ஐயா!

படப்பிடிப்பு: லீலா ஸ்ருடியோ.

# இரத்ததானம் ஒரு சமூகப்பணி

— தா. இராமலிங்கம் —

இன்று உலகிலே பலவிதமான தானங்கள் நடைமுறையில் இருந்துவருகின்றன. அவைபூதானம், கோதானம், அன்னதானம், சிரமதானம், செளக்கியதானம், இரத்ததானம் போன்றவைகளாகும். பூதானம் என்பது நிலமில்லாது கஷ்டமுறும் மக்களுக்கு நிலமுள்ளவரிடம் பெற்று அதைக்கொண்டே வாழ்க்கையை நடத்தச்செய்வதாகும். கோதானம் என்பது பசுக்கூட்டங்களை ஒருவருக்குதானமாகக் கொடுத்தலாகும். அன்னதானம் என்பதுஒருபொதுஇடத்தில் அல்லதுஆலயத்தில் ஒருவர் தன்ஞல்இயன்றளவிற்குஅன்னத்தை ஆக்கி அங்குள்ள மக்கள் யாவருச்கும் பகிர்ந்துகொடுத்தலாகும். ஒரு நோயாளி ஒரு சிறுதுளி இரத்தமில்லாமல்ஒவ்வொரு கணம் தோறும் நோயினுல் பீடிக்கப்பட்டு இறுதியில் மரணத்தின்பிடியிலே சிக்கிக்கொள்கின்ருன். இதனல் நாம் ஒருசிறிதளவு இரத்தத்தைக்கொடுத்து ஓர் உயிரைக் காப்பாற்றிவிடுகின்ருேம் இது இரத்த தானமாகும். சாதாரணமாக மனிதன் இரத்தத்தைக் கொடுப்பதனுல்தன்னுடைய உடல்பலத்தை இழந்துவிடுவதில்லை தானமாகக் கொடுத்த இரத்தத்தை அவன் இரண்டு மூன்று நாட்களில்பெற்றுபழையநிலையை அடைந்துவிடுகின்ருன்.

17-ம் நூற்ருண்டிலே இம்முயர்சி பிரான்சில்ஏற்பட்டபோது ஆரம்பத்தில் பிரான்சில் ஒரு டாக்டர், நோயினுல் பீடிக்கப்பட்டு இரத்தமின்றி இருந்த ஒரு சிறுவனுக்கு ஒரு சிறு ஆட்டுக்குட்டியைப்பிடித்து அதன் மூலம் இரத்தத்தை எடுத்து ஏற்றினர். இரத்தம் ஏற்றப்பெற்ற நோயாளி மயக்கம் நீங்கப்பெற்று அறிவு பெற்ருன். அவன் உயிர் தப்பிப்பிழைத்தது.

19-ம் நூற்ருண்டின் ஆரம்பத்திலே இப்படியான சிகிச்சை முறையானது மாற்றமடைந்தது. இம் முயற்சியிலே தோல்வியையேகைக்கொண்டனர். என்ருலும்இதனுல்ஒரு சில உண்மையைக் கண்டறிந்தனர். அதாவது உடம்பிலே இருந்துஇரத்தம் வெளியே வரும்பொழுது உறைந்துவிடுகின்றது என்பதுதான் அது. இதனுல்இரத்தம் உடலிலே இருந்து பிரியும்பொழுது உறையாமலிருப்பதைக் காண்பதற்கு முயன்ருர்.

இதன்பின்புதான் எவருடைய இரத்தம் எவருக்குப் பொருத்தமாக இருக்கும் என்பதைப்பரிசோதித்துக் கண்டறிந்தார்கள்.

1910-ம் ஆண்டு இன்னும் சில மாறுதல்கள் ஏற்பட்டன. நோயாளியின் இரத்தக் குழாயைஇரத்ததானம்செய்பவனின்இரத்தக்குழாயுடன் சத்திர சிகிச்சை செய்து பொருத்தி நோயாளிக்கு இரத்தம்ஏற்றுவதற்குமுயன்றனர். இதை முதன்முதலில் பிரான்சு தேசத்து டாக்டரான அலெற்றிகிஸ் கரல் என்பவர் செய்வதற்கு முயன்ருர். அவர் இரண்டு நாய்களைப் பிடித்து அவைகளை மயக்கமுறச் செய்துசத்திரசிகிச்சையினுல் இரத்தத்தை [illegible] இதில் இவர் வெற்றியேகண்டார். அதுமுதல் இவர்இரத்தமேற்றும்பிதா என்றும் அழைக்கப்பட்டார். நோபல் பரிசையும் பெற்ருர்.

1906-ம் ஆண்டில் இவ்வாராய்ச்சிக்கு மனிதனைப் பயன்படுத்தி அதில் வெற்றி கண்டார். இதுவே இன்று இரத்தமேற்றும்சிகிச்சையின் பூர்வோத்திரம். அமெரிக்காவில் உள்ள சத்திர சிகிச்சை டாக்டரான 'யாக்ஸ்' என்பவர்தான் இத்துறையில் வெற்றியீட்டிய முதல்வர். இவரது வெற்றியின் பயனுக இன்று உலகில் உள்ள சத்திர சிகிச்சை டாக்டர்கள் இரத்தமில்லாத நோயாளிக்கு இரத்தம் ஏற்றி நோயாளியின் உயிரைப் பிழைக்க வைத்திருக்கின்ருர்கள்.

இரத்தத்தைத் தானமாகக் கொடுக்கும் போது நோயாளி மயக்கம் நீங்கி அறிவைச் சிறிது சிறிதாகப் பெறுகின்ருன். ஆனுல் இரத்ததானம் கொடுப்பவர்கள் சிறிதுசிறிதாக மயக்கம் அடைகிருர்கள். ஒருசில நேரத்தில் இருவரும் அறிவு பெற்று மயக்கம் நீங்கி விடுகின்ருர்கள். தானமாகக் கொடுத்து இழந்த இரத்தத்தை இவன் இரண்டுஅல்லது மூன்று நாட்களில் பெற்று விடுகின்ருன். இதே சமயம் நோயாளியும் சாகாமல் காப்பாற்றப்பட்டு விடுகிருன்.

இன்றெல்லாம் இரத்ததானம் என்பது சர்வசாதாரண வைத்தியமுறையாகிவிட்டது. டாக்டர்கள் எவருடையஇரத்தம் எவருக்குப் பொருத்தமானது என்பதை நன்கு ஆராய்ச்சி செய்து பொருத்தமான நோயாளிக்கு இரத்தத்தை ஏற்றி அவனைக் காப்பாற்றிவிடுகின்ருர்கள் இப்படியாக வளர்ச்சி அடைந்துள்ளது இரத்ததானமாகும்.

### இரத்தம் என்பது யாது?

இரத்தம் ஆனது இருதயம், மகா நாடிகள், காரிரத்த நாடிகள், சிறுநாடிகள் ஊடாக ஓடிக்கொண்டு இருக்கும் ஒரு திரவபதார்த்தமாகும். இருதயம் ஒவ்வொருமுறை அடிக்கும் பொழுது இரத்தம் பிராணவாயுவையும், உணவுப் பொருட்களையும் உடலின் பல பாகங்களுக்கும் எடுத்துச் செல்லுகிறது.

இரத்தத்தின் வழியாக கழிவுப்பொருட்கள் சிறுநீரகங்கள், சுவாசப்பைகள் ஆகியவற்றிற்கு எடுத்துச் செல்லப்பட்டு அவ்வுறுப்புகளினுல் வெளியேற்றப்படுகின்றன.

ஒரு கன மிலிமீற்றர் இரத்தத்தில் 5,000,000 செவ்வணுக்களும் 8,000வெள்ளையணுக்களும், 200,000 லிருந்து 500,000 வரை சிறு தகடுபோன்ற அணுக்களும் காணப்படுகின்றன. இரும்

[VIII-ம் பக்கம் பார்க்க]

### கணவனைக் கைது செய்த காசோலைகள்

உலகப் புகழ்பெற்ற ஹொலிவூட் படத் தயாரிப்பாளர் வால்ட்டிஸ்னி தமது ஆரம்பகாலச் சீவியத்தைப்பற்றி கூறுகிருர்.

என்னுடைய தம்பிரேய்யும் நானும் ஹொலிவூட்டில் முதன் முதலாக ஸ்ருடியோ வைத்தபோது எங்களிடம் சொற்பபணமே இருந்தது. எங்களுக்கு உதவியாக ஓர் இளம் பெண்ணையும் வேலைக்கு அமர்த்திக் கொண்டோம். இப்பெண் நாங்கள் மாதம் மாதம் கொடுக்கும் சம்பளக் காசோலைகளை வங்கியில் கொடுத்து காசாக்காமல் அப்படியே வைத்திருப்பதை நாங்கள் கவனித்தோம். எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்துக் கொண்டுபோய் வங்கியில் கொடுப்பாளாகின் அவற்றை மாற்றுவதற்குப் போதிய பணம் வங்கியில் எங்கள் பெயரில் இருக்க மாட்டாதென்று பயந்து, ஒரு நாள் அவளை அணுகி 'நாங்கள் கொடுக்கும் காசோலைகளையெல்லாம் நீங்கள் மாற்ருமல் வைத்திருக்கிறீர்கள். உங்களுக்குப் பணம் தேவையில்லாவிட்டால் அவற்றைக் கிழித்தெறிந்துவிடுவதுதானே' என்று கூறினேன்.

மறுபேச்சின்றி அவள் எல்லா காசோலைகளையும் கிழித்தெறிந்துவிட்டாள்.

ஒருவேளை அதனுல்தான் நான் அவளை மணஞ்செய்துகொண்டேனே?

### கரும்பு தின்னக் கைக் கூலி

ஒரு பிரபல நடிகர் தமது வீட்டைப் பழுது பார்க்கும் சில கூலியாட்களை மகிழ்விக்கும் நல்லெண்ணத்துடன் அவர்களைத் தமது நாடகம் ஒன்றுக்கு வரும்படி அழைத்து இலவச டிக்கட்டுகளையும் கொடுத்தார். கூலியாட்கள் டிக்கட்டுகளை வாங்கிக்கொண்டுபோய் நாடகம் பார்த்தார்கள்.

மாத முடிவில் நடிகருக்கு பில் போயிற்று.

'சனிக்கிழமை இரவு 7 முதல் 10 மணிவரை, ஓவர்டைம். ரூ. 17-50.'

குறள் விளக்கம்

### இது வேண்டா!

- பொ. சண்முகநாதன்

நாட்டிலே ஏழைகள், இயலாதவர்கள், நோயாளிகள், மதிப்பில்லாததொழில் புரிபவர்கள், அறிவில்லாதவர்கள், திறமையற்றவர்கள் என்றெல்லாம் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் ஏராளமாக இருக்கிருர்கள்.

இவர்களுக்கு செல்வர், வல்லமையுள்ளவர்கள், நோயற்ற வாழ்வு வாழ்பவர்கள், மதிப்புள்ளதொழில் புரிபவர்கள், அறிவாளிகள், திறமைசாலிகள் என்றெல்லாம் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் தங்களால்இயன்ற உதவிகளைச்செய்து அவர்களை ஓம்பவேண்டியது அவசியமாகிறது. ஏன் அதை அவர்களதுகடமையென்று கூடச்சொல்லலாம்.

ஆனுல் சிலரோ இவற்றையெல்லாம் மறந்து வீண் தத்துவங்கள் பேசுவதையும் தங்களுக்குள்ள கடமைகளையும் பொறுப்புகளையும் தட்டிக்கழிப்பதையும் காண்கிருேம். அவர்கள்ஏழைகளாக, இயலாதவர்களாக, நோயாளிகளாக, தாழ்ந்த தொழில் புரிபவர்களாக, அறிவற்றவர்களாக, திறமையற்றவர்களாக உலாவுவதைப் பார்த்து அவர்களை 'முற்பிறப்பில் பாவம் செய்தவர்கள். அதனுல்தான் இப்படித் திரிகிருர்கள்' என்பார்கள் இதற்கு மாருக உயர்ந்த நிலையில் உள்ளவர்களை, 'அவர்கள்முற்பிறப்பில் புண்ணியம் செய்தவர்கள்' என்றும் அதனுல்தான் இப்படி மதிப்போடு விளங்குகிருர்கள்' என்றும் முடிவுகட்டிவிடுவார்கள்.

இப்படி 'அறத்தின் பயன் இது' என்று எதற்கும் முடிவு கட்டுவது வள்ளுவருக்கு உடன்பாடானது அல்ல! இப்படி முடிவுகட்டுவதால் இப்படி ஒரு கருத்துப்பரவுவதால் நாட்டிலே ஈகை இரக்கம் அன்பு அறம் அருள் என்பன எல்லாம் அற்றுப் போய்விடும் எனஅவர் அஞ்சினுர்.

எனவேதான்அவர் எமக்கு ஒரு பல்லக்குச்சுமவப்பவனையும், பல்லக்கில் உல்லாசப் பிரயாணம் செய்பவனையும் காட்டுகிருர். இருவருக்குமுள்ள வேறுபாடுகளை-அதாவது உயர்ந்த தாழ்ந்த நிலைகளையும் எண்ணிப்பார்க்கும் படிசொல்லுகிருர்.

மேற்படி இரு வேறுபாடுகளையும் நன்ருகக் கவனித்த நாம், ஒருவர் பல்லக்குச் சுமக்கும் பரிதாப நிலையில் இருப்பதற்கும், மற்றவர் பல்லக்கில் பவனிவரும் உல்லாச நிலையில் இருப்பதற்கும் 'அறம்'தானே காரணமாக இருக்கவேண்டும் என்று கேட்கிருேம்.

வள்ளுவரோ அழுத்தம் திருத்தமாக கூறுகிருர், இல்லை' என்று! இதோ அதற்கான குறள்-

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

### போட்டி முடிவுகள்

'ஈழநாடு' பத்திரிகையின் உதவியுடன் இரத்த தான சங்கத்தார் நடத்திய இரத்ததான சிறுகதை, கவிதை, சுவரொட்டி விளம்பரப் போட்டியின் முடிவு விபரங்களுக்கு கடைசிப்பக்கம் பார்க்க

## புத்தாண்டு சுபசோபனம்

வருக வருக பராபவ வருக
பருக அமுதம் படைத்தோம் வருக
பன்னிரு மாதம் பார்தனி லாட்சி
உன்னிடம் தந்தோம் உவப்புடன் நாமே,
சித்திரை மாதம் சிங்களர் தமிழர்
புத்தின மின்றே புகுவையே ஆட்சி.
முன்னிடர் தீர முதல்வனை வேண்டி
பின்னிடர் வாரா பெரும்பணி செய்யே!
அன்னிய ராட்சி அகன்று இந்நாளும்
முன்னணி காணு முடங்கிடு நாட்டை
கண்ணிய மாகக் காத்தருள் செய்வாய்
எண்ணிலாச் செல்வம் யாவையும் தந்தே:
கமத்தொழில் கைத்தொழில் கலைத்துறை ஓங்க
எமக்களி ஆக்கம் இன்பமே பொங்க.
விண்விழி நீரை விரயம் செய்யா
மண்குழி தேக்கி மலிவளம் செய்யே:
ஆற்றுடை நீரை அகலத் திறந்தே
தேற்றமில் விடத்தைச் செழிப்புறச் செய்யே:
காற்றிட ராலும் கடிமழை யாலும்
வேற்றுமை காட்டி விரயம் செய்யேல்.
ஒற்றுமை யுடனே ஒளிபெற உலகை
பற்றுடன் காப்பாய் பராபவ ஆண்டே:
ஆறிரு மாதம் ஆளப் பிறந்தாய்
வேறெவ ரேனும் விரும்பியே வாராப்
பேறினைப் பெற்ருய் பராபவ வருடப்
பேருடன் வாழ்வாய் பின்பும் வருவாய்
பாருலகினிலே பராபவ ஆண்டே:

— அரியாலையூர், வே. ஐயாத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாவாவிற் சைவம்

## அயல் நாடுகளில் சைவம் -11

**ந. சி. கந்தையாபிள்ளை**

கிறித்த ஆண்டு தொடங்குவதன்முன் அல்லது சிறிதுபின் இந்திய மக்கள் வாணிகத்தின் பொருட்டுக் கடல் கடந்து, இந்துமாக் கடல் தீவுகளுக்கும், பசிபிக் கடல் தீவுகள், யப்பான் தீவுகள், பிலிப்பைன் தீவுகளுக்கும், பர்மா, சீயம், இந்துசீனம் முதலிய நாடுகளுக்கும் சென்ருர்கள். வெளியே சென்ற மக்கள் மகளிரை உடன்கொண்டு செல்லவில்லை. மகளிருடன் கடல் கடந்து செல்லுதல் அக்கால வழக்காக இருக்கவில்லை. ''முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை'' எனத் தொல்காப்பியங் கூறுகின்றது ''திரைகடலோடியுந் திரவியந்தேடு'' என்பது தமிழ் நாட்டுப் பழமொழி. தரை வழியாகவும் கடல் வழியாகவும் வாணிகத்தின் பொருட்டுத் தொலைவிடங்களுக்குச் சென்ற மக்களுட் பலர் தமது தாய் நாட்டுக்குத் திரும்பவில்லை; தாம் சென்ற நாடுகளில் தங்கினுர்கள்; அந்நாடுகளின் மகளிரை மணந்து சந்ததியைப் பெருக்கினுர்கள்; தமது சமயத்தையும் பண்பாட்டையும் அந்நாடுகளிற் பரப்பினுர்கள். அயல் நாடுகளிற் குடியேறிய இந்திய மக்கள் நாளடைவில் அந்நாடுகளுக்கு அதிபதிகளாகி இராச்சியங்களை அமைத்தார்கள். இந்தியப் பண்பாட்டையும் சிவவழிபாட்டையும் காட்டும் பழைய சின்னங்கள் இன்றும் அந்நாடுகளிற் காணப்படுகின்றன.

யாவாத்தீவில் கோவில்கள் பலவற்றின் இடிபாடுகள் காணப்படுகின்றன. அவற்றுட் சில சிவன்கோவில்கள். யாவா மக்கள் வழிபட்ட தெய்வங்களின் பெயர்கள், அமரமாலை என்னும் அவர்கள் நூலிற் கூறப்படுகின்றன. அவ்வரிசையில் சிவனின் பெயர் காணப்படுகின்றது. சிவபெருமான், அம்மன் திருவுருவங்கள் அங்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. யாவாவிற் கிடைத்த சாசனமொன்று, சங்கயர் என்னும் மன்னன் சிவலிங்கமொன்றைப் பிரதிட்டை செய்தானெனக் கூறுகின்றது. பிறிதோர் சாசனம் அங்கு அகத்தியருக்குக் கோவிலிருந்ததைக் குறிப்பிடுகின்றது.

''யாவா மக்கள் சிவனையே பெரிதும் வழிபட்டார்கள். சண்டிக்குக் கோவில்களிருந்தன. பட்டேவியா நூதன பொருட்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும்மூன்று திருவுருவங்களிலொன்று சிவமூர்த்தி. இத்திருவுருவம் ஒரு அடி, ஒரு அங்குல உயரமுடையது. அதன் உச்சியில் கூட்டி முடியப்பட்ட சடாமுடியின் மத்தியில் பிறைச்சந்திரன் இருக்கிறது. திருவுருவத்துக்கு நான்கு கைகளிருக்கின்றன. அங்கு வைக்கப்பட்டுள்ள இன்னெரு வடிவம் திரிலோகவிசய சிவன். அதற்கு நான்கு முகங்களும் எட்டுக் கைகளும் இருக்கின்றன. ஒவ்வொரு முகமும் வெவ்வேறு முத்திரையைக் காட்டுகிறது. மூன்ருவது திருவடிவம் யோகமூர்த்தி. இது யோகத்திலிருக்கும் பாவனையில் நன்ருக அமைந்துள்ளது.

''யாவாவிலுள்ள நகரமொன்றின் சுல்தானுக்குப் புவனசேனுபதி என்னும் பெயர் வழங்குகிறது. யாவானியரின் பாவைக் கூத்துகளில் பாரத இராமாயணக் கதைகள் படிக்கப்படுகின்றன. பரம்பனன் என்னும் இடத்தில் ஆடம்பரமான சண்டி- சிவன் கோவிலிருக்கிறது. கோவிற் சுவர்களில் சடாயு- இராவணப் போர்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன. நான்கு சுவர்களிலும் பிரமா, விட்டுணு, மகேசுவரர், சத்தி என்னும் கடவுளரின் உருவங்கள் காணப்படுகின்றன. அங்கு நந்திதேவருக்கு ஒரு கோவிலுமிருக்கிறது. யாவா மக்களின் பழைய சட்ட நூல்களிலொன்றின் (கி. பி. 991) பெயர் சிவசாசனம்.''

பாகியன் என்னும் சீன யாத்திரிகன் (கி. பி. 414), யாவாவில் பெரும்பான்மை இந்து மதத்தினரும் சிறுபான்மை பௌத்தரும் காணப்படுகின்றனர் எனக் கூறியிருக்கின்ருன். பிற்காலத்து அங்கு பௌத்த மதத்தோடு, சைவமும் வைணமும் பரவியிருந்தன. சிவன் கோவில்களில் பௌத்த சின்னங்களும் இடம்பெற்றன. சப்புவத்து (Chupuvatu) என்னுமிடத்திலுள்ள பௌத்த கோவிற் ரூபி இலிங்கவடிவிலமைந்துள்ளது. 13-ம் நூற்ருண்டில் வாழ்ந்த யாவானிய அரசனெருவன் சிவபுத்தன் எனப் பெயர் சூடியிருந்தான். யாவாவில் வழங்கிய பழமொழிகளிலொன்று சிவனும் புத்தரும் ஒருவர் என்பது. போரபுதூர் என்னுமிடத்தில் சிவ, விட்டுணு, பௌத்த விக்கிரகங்கள் ஒன்றன் பக்கத்திலொன்ருக வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு இன்றும், மாபாரதம், இராமாயணக் கதைகளைத் தழுவிய நாடகங்கள் நடத்தப்படுகின்றன. யாவானியரின் நாடகம் இந்துக்களின் நாடகம்போன்று ஆட்டத்தின் வளர்ச்சியாகவுள்ளது. யப்பானியரின் நோ (Noh) நாடகமென்பது ஆட்டத்திலுல் சில குறிப்புகளை விளக்கும் சமயசம்பந்தமான ஆட்டம், யாவாவின் சிற்பவேலைப்பாடு எல்லோரா, மாமல்லபுரம், இலங்கைச் சிற்பவேலைகளை ஒத்தன.

''இராமாயணம் யாவாத்தீவைக் குறிக்கின்றது. முதலாம் நூற்ருண்டைச் சார்ந்த பௌத்தவரலாறுகளும் யாவாவைப்பற்றிக் கூறுகின்றன. யாவகத்தீவு என்பதற்கு வாற்கோதுமைத்தீவு என்பது பொருள். இரண்டாம் நூற்ருண்டைச் சேர்ந்த மணிமேகலை யாவாத்தீவை ஆண்ட அரசனைப்பற்றிக் கூறுகின்றது. கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்ட சாசனம் ஒன்று (கி. பி. 5-ம் நூற்ருண்டு) தருமநகரத்தரசனுபூரணவர்மனைக் குறிப்பிடுகின்றது. 423 ல் காசுமீர அரச குடும்பத்தைச் சேர்ந்த குணவர்மன் என்னும் பௌத்த துறவி சீனுவுக்குச் செல்லும் வழியில் யாவாவுக்குச் சென்ருர். தாம் சென்ற மரக்கலத்தில் யாவாவுக்குச் செல்லும் வணிகர் இருந்தார்களென்றும் அவர்கள் யாவாவோடும் சீனுவோடும் வாணிகம் புரிந்தார்களென்றும் அவர் கூறியிருக்கின்ருர். ஆரும் நூற்ருண்டில் எரிமலை வெடித்ததால் தருமநகரம் அழிந்தது.

''732-ல்பொறிக்கப்பட்ட சாசனமொன்று மத்திய யாவாவில் கிடைத்தது. அது தென்னிந்தியாவில் பொதிய மலையில் வாழ்ந்த அகத்திய முனிவரைப்பற்றிக் கூறுகின்றது. இன்னெரு சாசனம் அகத்தியரின் சந்ததியினர் மத்திய யாவாவிற் குடியேறியதைப்பற்றிக் கூறுகின்றது. இவை இந்தியாவுக்கும், யாவாவுக்கும் இடையில் இருந்த பண்பாட்டுத் தொடர்பைக் காட்டுவன. மத்திய யாவாவில் இன்றும் இந்துக் கோவில்களின் இடிபாடுகள் காணப்படுகின்றன.

''மேற்கு யாவாவிற் காணப்பட்ட ஒரு சாசனம் பூரணவர்மனை இராசஇராசன் எனவும் அவனுடைய தந்தையை இராசாதிராசன் எனவும் கூறுகின்றது. இவன் கந்திரபங்க என்னும் வாய்க்காலை வெட்டினுன். இதன் நீளம் 6122 தனு. அவன் பிராமணருக்கு 1000 பசுக்களைத் தக்கணையாக வழங்கினுன். பூரணவர்மன், விட்டுணுபாதம், ஐராவதம் முதலிய பெயர்கள் சாசனங்களிற் காணப்படுகின்றன.

இவ்வாறு யாவா முழுமையிலும் இந்தியர் குடியேற்றமும், இந்தியர் ஆட்சியும், சைவம், வைணவம், பௌத்தம் என்னும் மதங்களும் 15-ம் நூற்ருண்டின்முன் ஓங்கிப் பரவியிருந்தன.

ஆதாரம்.

1. Greater India - R. C. magumdar.
2. A Study on the influence of Indian Culture on malaysia of Malaya-swami satyananda
3. Religions of India- A P Karmakar
4. The vision of india- sisir kumar mitra.

# சிறுகதை (IIIம்பக்கத் தொடர்ச்சி)

படியாய் நீ ஆக்கிவிடக் கூடாது....'

அந்த நிமிடமே அந்தப் பெண்ணின் கருநீலக் கண்களும், அதில் புரளும் அற்புத சௌந்தர்யங்களும் குமிழியிடக் குமிழியிடச்சிரிக்கும் சிரிப்பும் மறைந்துவிட்டன. அந்தக் கம்பீரமான உருவத்தில் இருந்தும் சலனத்தையே கண்டறியாத அவரது மனம் என் உள் இறங்கிவிட்டாற்போலிருந்தது.

இரண்டு ஆண்டுகளின்பின்னுல் இப்போது ஒரு சலனம். அவளுக்காய் எழுதிய கடிதத்தைப் பார்த்தேன். எக்கே அசங்கிதமாயிருந்தது. என் கதைகளிலேகூடத்தான் இதுவரை நான்எழுதாதவரிகளாயிருந்தன.

அறையைவிட்டு எழுந்து, வராந்தாவில் வந்து படுத்தபடி அவளை நினைத்துப்பார்த்தேன். இரண்டு ஆண்டுகளின் முன்னுல் அவள் சிரித்த சிரிப்பு இப்போதும் பசுமையாயிருக்கிறது. நெஞ்சில் ஆதங்கம் மூண்டுவிட்டது. அத்தனை தூரம் அவமானப் படுத்தியிருக்கக் கூடாதென்பது போல ஒரு வருத்தம் மனதைப்பிசைந்தது.

தபால்காரன் குரல்

எழுந்துபோய்க்கடிதத்தை வாங்கினேன். எழுத்து உருண்டு உருண்டு முத்துக் கோத்தாற்போல இருந்தது. மனம் துள்ளக் கடிதத்தைப் பிரித்தேன்.

கடிதத்தின் வரிகள் ஓடின. ''இரண்டு ஆண்டுகளாய் வீதியிலும் தெருவிலும் சந்தியிலும் பிற இடங்களிலும் உங்களைப் பார்ப்பதற்காய் நான் அலைந்திருக்கிறேன். நீங்கள் சந்தித்ததில்லை. துறவியாய் எங்கேனும் போய்விட்டீர்களோ என்று சந்தேகப்பட்டேன். எப்படியோ நினைப்பையே தவமாக்கிச்செய்த பிரார்த்தனையில் உங்கள் இருப்பிடத்தை அறிந்துகொண்டேன். படத்தைப்பார்த்தால் உங்களுக்கு என்னைத் தெரியுமே? இராமர் சீதையைச் சந்திக்க அனுப்பியபோது அடையாளமாய்த் தனது கணையாழியைக் கொடுத்து உறவைத் தெரிவித்துக்கொண்டாற் போல 'மேல் விதானத்தில் கும்மாளமிடும் அழகுகளைப்பார்க்கிறேன்' என்ற உங்களது வார்த்தைகளையே சொல்லிக்கொள்கிறேன். இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. உங்களின்வரண்ட தத்துவ விசாரங்கள் போய் உங்கள் உள்ளத்தில் நளினமான பெண்ணைப் பற்றிய எண்ணங்கள் எழுமானுல் என்னை வந்துசந்திக்கலாமே? உங்களுக்காக இன்னும் இன்னும் தவம்செய்து கொண்டிருப்பேன். படம் அனுப்பியிருக்கிறேன். துப்பிவிடாதீர்கள்.'

மனதில்சலனம் எழுந்தால் அது பெருகிப்பெருகிப்போக ஆரம்பித்துவிடுகிறது. தடுத்து நிறுத்தி 'இவை உனக்கு ஏற்றவையல்ல; ஏற்றவையே அல்ல' என்றுமனம் கதறிக் கதறி அழுதாலும், கற்ற நூல்களின் பொருட்கள் வந்து ஒரே சமயத்தில் குவிந்தாலும்மனதில்பிளந்த சலனத்தைத்தடுத்துநிறுத்திவிடமுடிகிறதில்லை. அவளைப் போய்ப்பார்க்க வேண்டும் என்று நெஞ்சு துடிக்க ஆரம்பித்துவிட்டது.

விலாசத்தைத் தேடிக் கொண்டுபோனேன்.

அவள் வாயிலில் நின்ருள். இரண்டு ஆண்டுகளுக்கிடையில் அவள் அழகாய் இன்னும் அழகாய்ப்பொலிந்துபோயிருந்தாள். வீடு பழம் வீடாயிருந்தது. வறுமையின் கோலங்கள் அங்குமிங்குமாய் மிதந்து மிதந்து நின்றன. அவள் பேரரசியாய் நின்ருள்.

'வாருங்கள்' என்று வரவேற்ருள்.

இருக்கச்சொல்லி ஒரு கதிரையைப் போட்டாள்.

நெடுநாட் பழகியவளைப் போல என் சேமலாபங்களை விசாரித்தாள். அதே குமிழுடுகிற சிரிப்போடு என்னையே இமையாது இமையாது பார்த்தாள்.

'என்ன வேண்டும்'?

பேசாமல் இருந்தேன்.

'சொல்லுங்கள். உங்களுக்கு என்ன வேண்டும்' மிகவும் நிதானமாய் மிகவும் நிதானமாய் வார்த்தைகளை இழுத்து நிறுத்தி நிறுத்திக் குமிழிடும் சிரிப்போடு கேட்டாள்.

'பேசுங்களேன்'

நான் பேசாமல் இருந்தேன்.

மகத்தான காரியத்தைச் செய்யப் பிறந்திருக்கிறேன் என்கிறுற்போல எனக்கு அடிக்கடி ஒரு நினைவு மனத்தே எழுவதுண்டு. எனது படிப்பறையில் மாட்டப்பட்டிருக்கும் சுவாமி விவேகானந்தரின் அற்புத உருவம் என் முன்னுல் தெரிகிறுற் போல இருக்கும். சலனங்கள் ஏற்படாமல் அவற்றைத் 'தூ' என்று காறி உமிழ்வதற்கான நெஞ்சும் அந்த நினைவு தந்த வெற்றிதான். அவள் தேநீர் போடவோ எதற்கோ உள்ளே போனுள். சடுதியாய் எழுந்து ஓடி வந்துவிட்டேன்.

வீட்டிற்கு வந்து முதல் வேலையாய் அவளுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அற்புதமான விவேகானந்தரின் கண்களைப் பார்த்தபடியே கடிதத்தை எழுதினேன். மிகவும் வேகமாய் மிகவும் வேகமாய் கடிதவரிகள் [illegible]

உனக்காய் இப்போது நான் விம்மி விம்மி அழுகிறேன். நீயே பெருமளவு காரணமாகி என் நெஞ்சரங்கில் ஏற்ற முயன்ற உன்னைப்பற்றிய நளின நினைவுகள் இந்த நிமிடத்திலிருந்தும் கருகி உதிருகின்றன. இந்த நிமிடம் உன் புனிதமான இருதயத்திற்காகவும் உன் நல்வாழ்விற்காகவும் நான் நெகிழ்ந்து நெகிழ்ந்து பிரார்த்திக்கிறேன் நீ என்னைப் புரிந்துகொண்டு அன்புசெலுத்த முயன்ற நினைவு, பெண்ணைப்பற்றிய இனிய நினைவுகளுள் இனிய நினைவாய் இருக்கும். பல ஆண்டுகளுக்கு முன்னுல் என் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை உனக்கு நான் அப்படியே எழுதுகிறேன். அதை நீ புரிந்துகொள்ளக் கூடுமானுல் உன் அன்பை ஏற்றுக்கொள்ள முடியாமல் நான் உதறிவிடுவதற்கு என்னை நீ மன்னித்துவிடக்கூடும்.

ஒரு சமயம் இந்து தத்துவங்களின் பெயரையே தெரியாத இளைஞர்களும் பெரியவர்களும் சின்னவர்களும் ஆணும் பெண்ணும் எல்லோருமாய்க் கூடிக்கூடி என் கதைகளை வார்த்தைக்கு வார்த்தை பரிசோதித்தார்கள். என் கண்களையும், கண் பார்வையையும் சிரிப்பையும் உடையையும் தோற்றத்தையும் பார்த்து என் எழுத்தோடு பொருத்தினுர்கள். தம் அறியாமையாகிய அளவுகோலால் என்னை மந்திரவாதியாயும், சாமி, துறவியாயும், இராமகிருஷ்ணராயும் ஆக்கிவிட்டார்கள். 'நான் எதைப் பார்க்கிறேன் எப்படிப் பார்க்கிறேன்' என்பதை எல்லாம் வேவுபார்க்க மனிதர்கள் பெருகி நின்ற சமயம் அது. என்னை வேவு பார்த்த மனிதர்கள் எல்லாரையுமே நான் பைத்தியங்களாக்கியிருக்கிறேன் [illegible]ர்களைப் பைத்தியங்கள் ஆக்குவதற்காய் மேலேயும் கீழேயும் பார்த்துப் பார்த்து நான் துறவியாய் நடித்த நடிப்பில் என் கண்கள்கூட நோ எடுத்துவிட்டிருந்தன. உணர்வுமயமாய் நான் எழுதிய எழுத்திற்கு நானே அர்த்தம் கண்டுபிடித்து அவற்றைத் தாகூரின் பேரிலும், பாரதியின் பேரிலும் சுமத்திவிட்டு-பைத்தியங்களாய் இந்த உலகத்தை ஆக்கிவிட்ட சிரிப்பில் நான் மகிழ்ந்தது என்னவோ உண்மைதான். கலையைப் பின்பற்றுகிற- கலைப்பயிற்சியில் ஈடுபட்ட எவருக்கும் இயல்பாய் அமையும் 'மயக்கத்தைத் தருகின்ருற் போன்ற கண் அமைப்பை' புனிதமான யோகியின் கண்களுக்கும் மந்திரவாதியின் வெறிக் கண்களுக்குமாய் ஒப்பிட்டு நின்ற அந்த மனிதர்களை நான் உற்று உற்றுப் பார்த்தே கதிகலங்கப்பண்ணியிருக்க முடியும். ஆனுலோ என்னுல் அழத்தான் முடிந்தது. தம் சமயத்தின் அந்தரங்கமான இரகசியங்களைப் புரிந்துகொள்ள முடியாத அந்த மனிதர்களை நொந்து ஆகிறது என்ன; சந்தி முகப்புகள் பஸ் நிலையங்கள் வீதி முகப்புகள்என்றுஇன்றைக்கு ஒன்றையுமே தெரியாமல், தெரிந்துகொள்ள விருப்பமில்லாமல் பெருகி நிற்கிற இளைஞர்களின் நெஞ்சங்களிலே கனலை மூட்டி விடுவதாய் அப்போதேதான் சத்தியம் செய்தேன். இந்தக் கனலை ஏற்றுவதற்குக் 'கிப்நொடிஸ' முறையோ அல்லது தாயையும் குழந்தையையும் வழிவழிபடுகிற முறையோ உதவிவிடாது. இது வாழ்க்கைப் போராட்டம். எழுதுகிறவன் அழிகிற போராட்டம். வேறு நினைப்பின்றி அந்த இலட்சியத்தையே நினைந்து நினைந்து வாழ்ந்தால்மட்டுமே அதைச் சாதிக்க முடியும். அந்தச் சாதனையில் அவன் அழிகிருன்.

(VIIம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

# நிமிடப் பூக்கள்

'பெண்ணே, உன் முகத்தில் காவியங்களின் அழகுகளைக் காணுகிறேன். உன் விழிக்கோணத்தில் நிலவுவழியும் அழகினை உணருகிறேன். நிலத்தைப் பிளந்து புறப்படும் பயிரின் முனையில் துள்ளும் உயிரின் பொலிவு போன்ற உன் பொலிவில் ஆட்படுகிறேன். அழகுகள் உன்னில் இருந்தும் பிறந்து உன்னிலேயே சங்கமமாகிவிடுகிற விந்தையில் என்னை இழந்துகொண்டிருக்கிறேன். ஓவியனின் நினைவோடே ஒட்டி ஒட்டித் தூரிகை சிதறும் நிறங்களின் அழகுபோல உன்னை நினைக்க நினைக்க என் மனமாகிய தூரிகை அழகுகளைத் தூற்றுகிறது... நீ...?

நெஞ்சில் மூட்டிய 'தீ' அவிந்துவிட்டதா? நான் பைத்தியக்காரன் ஆகிவிட்டேனா? பார்த்தசாரதிகோவிலில் போய் ஏழைகளை உயர்த்துவதே உங்கள் விரதமாய் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று விவேகானந்தர் யுவர்களுக்குக் கட்டளையிட்டாரே? அந்தக்கட்டளையை நெஞ்சின் அந்தரங்கமான காதல் நினைவைப்போல் போற்றிப் போற்றி நான் மகிழவில்லையா? இந்த நாட்டின் துடிப்புள்ள இளைஞர்களின் நெஞ்சங்களிலே கனலை மூட்டி விடவேண்டுமென்று கனவுகண்டுகொண்டிருந்தேனே--

எனது படிப்பறையில் மாட்டப்பட்டிருந்த சுவாமி விவேகானந்தரின் திருஉருவப் படத்தைப் பார்த்தேன். என்னால் பார்க்கவே கூடவில்லை, கண்கள் சோர்ந்து சோர்ந்து தள்ளாடின. மதுவுண்ட கண்கள் எங்கும் நிலைகொள்ளாமல் நடுங்கிச் சோருகிறாற் போலத்தான். வாழ்வில் சலனங்கள் தாம் எத்தனை-என்வரையில்! அந்தச் சலனங்களிலெல்லாம் தப்பித் தப்பி ஆடிப்போய்விடாமல் சம்பீரமான அருளொளி கொழிக்கிற அற்புதமான விவேகானந்தரின் கண்களை நினைத்து நினைத்துத் தப்பிவந்தேனே? இப்போது மட்டும்...... பெண் ஒருத்திக்காய் நெகிழ்ந்து போய்க்கடிதம் எழுத ஆரம்பிப்பது என்று ஆகிவிடுமாப் போல் இருக்கிறதே—

எழுதிய கடிதமும் தாளும் படபடவென்று நடுங்கின. துணிந்து இமைவெட்டாமல் அந்தக் கண்களைப் பார்த்தேன். அவரது கண்களின் வெண்விழிப் பரப்பில் ஒரு சமயம் ஒரு சமயம்என் கண்களில் இருந்தும் வீறிட்டுப் பெருகிய நீரும் கலந்திருந்தாற்போலிருந்தது.

மனம் அந்தச்சம்பவத்தை அவர் கண்களின் வழியாற் பார்க்கிறாற் போலத்தோன்றிற்று-

வருடாந்த மகோற்சவ நாட்களின் பின்னர் கந்தசுவாமி கோவில் மங்கத் தொடங்கி விட்டிருந்தது. ஆனால் அன்றைக்கு கைலாய வாகனத் திருவிழா அன்று வீதியே கும்மாளமிட்டுக் கொண்டிருந்தது. பெருகி நிற்கிற ஜனத்திரளில் தெய்வமே அஞ்சிச்சோருகிறாற் போலப்பட்டது. கந்தசுவாமி கோவிலுக்குப் போகிற வழக்கமே எனக்குக் கிடையாது. உருண்டு உருண்டு கல்லும் முள்ளும் கீறக்கீற நாயனர் ஒருவர் போனாற்போல ஜனத்திரளில் ஏறியும் இறங்கியும் அந்தரத்திலும் போக யாரால் இலகுவில் முடிந்து விடுகிறது? நண்பன் அந்தத் திருவிழாவைப் பார்ப்பதற்காகக் கொழும்பில் இருந்து வந்திருந்தான். அவனோடு இழுபட்டுப் போய்விட்டேன். அவனைக் கோவிலின் உட்பிரகாரத்துள் பக்திரஸம் சொட்ட நிற்கவிட்டுவிட்டு, நான் அப்பால் நகர்ந்து தீர்த்தக்குண்டுப் படிக்கட்டில் காலை தண்ணீருள் தோய்த்து அளைந்தபடியே விரிவானத்தைப் பார்த்து இருந்தேன்.

தீர்த்தக்கேணியின் மேல் விதானத்தையும் மீறித் தென்னை மரங்களின் முடிகள் மட்டுமே தெரிந்தன. அந்தரத்தில் கருநீலம் போர்த்தபசுமைபளீரென்று பிரகாசிக்கும் வெண்ணிலவில் குளிர்ச்சியாய் நின்றது. வெண்பொட்டுக்களைப் பதித்திருக்கும் திமிரில் அங்கும் இங்குமாய் விரிவான் ஒளி கூட்டி நகைத்தது. இத்தனை ஆயிரம் ஜனத்திரளின் மத்தியில் இருந்தும் நல்லூர்க் கந்தன் அஞ்சி நடுங்கி விரிவானின் ஒளிப் பொட்டில் நின்றும் சுற்றிநிற்கிற ஜனத்திரளைப் பரிகாசமாய்ப்பார்த்துக் கண்சிமிட்டுகிறாற் போலப் பிரமையுணர்வு. பார்த்தபடி இருந்தேன்.

சிரிப்பொலி எழுந்து என்னைச் சுண்டிற்று.

திரும்பிப் பார்த்தேன்.

உயிர்ப்பூ ஒன்று மெல்லென மெல்லென நடந்து வந்து கீழ்ப்படியில் எனக்கு வெகு சமீபமாய் நின்றது. அவள் கூசாமல் வெட்கப்படாமல் நாணமேயில்லாமல் என்னையும் விரிவானையும் மீண்டும் மீண்டும் மாறி மாறிப்பார்த்துச் சிரித்தாள். திருவிழாக்காலங்களில் முருகன் தன் 'தினைப்புனத்து லீலைகளை' இளசுகள் மேல் ஏற்றி நாடகம் ஆடிவிடுவதாய் கேள்விப்பட்டிருக்கிறேன். 'இது ஒரு பைத்தியம்' என்று எண்ணியபடியே நான் முகத்தைத் திருப்பிக்கொண்டேன்.

நீரில் சலசலப்புப் பிறந்தது. திரும்பிப் பார்த்தேன். சேலைக்சரையை சற்றே கால் மேல் மிதத்தியபடியே காலை நீரில்விட்டு நீரைக் குமிழிசக்கச் செய்தபடி இருந்தாள். அந்தச் சூழ்நிலையில் ஒரு மகா காவியத்தின் நளினங்களைச் சுமந்தபடி நிற்கிறாற் போலத்தான் அவள் தோன்றினாள். இளம் சிவப்பும் மரநிறமும் கலந்த சேலையும் அதற்கேற்றாற்போன்ற மேற்சட்டையும் அவளுக்கு மிக்க எடுப்பாயிருந்தது. கவலையில்லாமல் அலாதி ஆணவத்தோடு தானே அவ்விடத்தின் அரசிபோலத் 'தட்டத்தை ஏந்தி'யிருந்த அழகு என் உள் விர்ரென ஏறுமாப் போல இருந்தது. கலையைப் பின்பற்றுகின்ற கலைஞனின் மனம்தான் எவ்வளவு கோமாளித்தனமாய் ஆகிவிட்டிருக்கிறது. ஆஸ்கார் ஒயில்ட், பைரன் முதலான கலைஞர்கள் நெறி பிறழ்ந்து நெறிபிறழ்ந்து அழகுக்கு ஆட்பட்டு ஆட்பட்டுப் போய்ச் சீரழிந்ததற்கு அவர்களின் 'புனித வழிபாடற்ற' தன்மையே காரணமாயிற்று என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். பாரதி முதலான கவிகள் அழகைப் போற்றியிருந்தாலும் சீரழியாமல் இருந்ததற்கு அந்தப் புனிதவழிபாட்டுத் தன்மையே காரணமாயிற்றோ என்னவோ? நெஞ்சில் எது எதுவோ சிந்தனைகள் பற்றிப் படர நான் அவளைப் பார்த்தேன். அவளது அற்புதமான அழகை இந்த உலகத்தின் சகல பரிசுத்தங்களின் [illegible] முயன்றேன், நெஞ்சில்ஏறிய சலனம் தீருகிறதாக இல்லை, என் நுட்பமான அழகுரசனைப் புலன்களில் அவள் இடம் பிடிக்கலானாள்.

ஃ ஃ ஃ

அவளது ஆணவத்தோடும் திமிரோடும் ஒரு நிமிடம் வேடிக்கை ஆடலாம் போல என் உள் புதுக்குரல். நாணமல் கூசாமல் வெட்கப்படாமல் அவளை நான் பார்த்தேன். என் கண்களே மருட்சி கண்டு, நாணம் கொண்டு, தாழ்ந்து விரிவானுக்கு மாறிற்று. அவள் மீண்டும் சிரித்தாள். நான் ஆண்பிள்ளை என்கிற அகங்காரம் என் உள் மூண்டுவிட்டது.

திரும்பிவிடாமல் அவள் கண்களைப் பார்த்தேன்.

மீண்டும் தோல்வி.

மீண்டும் அவள்சிரித்தாள். கன்னத்தில் போய்'பளீர்' என்று அறைந்துவிட வேண்டுமென்பதுபோல ஒரு நினைவு. எழுந்து ஓடிவிட்டால் அவமானம் என்கிற ஆதங்கம்.

நான் திரும்பியே பாராமல் இருந்தேன்.

நேரம் பெயர்ந்துகொண்டிருந்தது. அவள் தொலைந்துபோய்விட்டாள் என்கிற நினைப்பில் திரும்பினால்- அவள், அதே சிரிப்புமாறுமல் இன்னமும் அங்கு நின்றாள். பேசவும் செய்தாள்.

"முனியப்பதாசன்"

'என்ன அப்படிப் பார்க்கிறீங்கள்.'

இவளுக்காய், இவள் ஆணவத்தையும் திமிரையும் அடக்கிவிடுவதற்காய் நான் 'இந்தத்துறையில்' இறங்கி என்னைப் பழக்கப்படுத்தியிருக்கலாமே என்கிறாற்போல பெரும் வேதனை மூண்டது. நாலு இடங்களுக்குப்போய் நாலு பெண்களோடும் பழகியிருந்தால்......?

வெறுப்பைக் கண்களின் வழியே திரட்டி விரிவானையும் சுட்டிக்காட்டி 'இந்த விதானத்தின் மேல் கும்மாளமிடும் அழகுகளை' என்று சொன்னேன். என் உள்ளமே என்னை ஏமாற்றியிருக்கலாமோ? வெறுப்பைக் காட்டுகிறாற்போலக் கனிவைக் காட்டிவிட்டேனோ?

அப்போதே - அப்போதே தான், அவளுக்கு நாணம் பிறந்தாற்போலிருந்தது.

சடுதியாய்என் மனம்விழித்துக்கொண்டுவிட்டது. என் மனதின் சேட்டை எனக்கே அசிங்கமானதாயப்பட்டு விட்டது. ஒன்றுமே பேசாமல் எழுந்துபோக ஆரம்பித்தேன். வடக்கு வீதியில் மணலில் புரளலாம் என்றோ, போவதுபோல் போக்குக் காட்டிவிட்டு அவள் போனதின்பின்னால் மீண்டும் வந்து உட்கார்ந்துகொள்ளலாமென்றோதான் நான் எண்ணியிருந்தேன். வாயிலில் நின்றும் திரும்பிப்பார்த்தேன். அவள் என்னையே பார்த்தபடிநின்றாள். வடக்கு வீதியின் மணலில் புரண்டபடி இருந்தேன் நான். வடக்கு வீதியைக் கடந்து வாகனம் போய்விட்டதால் அங்கே ஜன நடமாட்டம் அதிகமில்லை. புரண்டபடி கிடந்த என்மேல் தன் சேலையின் கீழ் முனைகள் உரசும் படியாய் நடந்து வெகு சமீபமாய் அவள் நின்றாள்.

அதேகுமிழியிடுகிறசிரிப்பு.

எனக்கு ஆத்திரம் பற்றிவிட்டது.

'எதற்கு நீ சிரிக்கவேண்டும்?'

அதே நளினம் இறும் சிரிப்பு.

எழுந்துவிட்டேன். நான் நடக்க, அவளும் நடக்கஆரம்பித்தாள். அவளும் இப்படி யாரையேனும் பைத்தியமாக்கிக்கொண்டிருக்கிறாளோ என்று நினைத்தேன். இதழ்வழியே அமுதம்கசிந்து கசிந்து பைத்தியமாக்குகிற சிரிப்போடு அவள் தொடரத்தொடர எனக்குப் பைத்தியம் பிடிக்குமாப்போல இருந்தது. என் கனவுகளும் இலட்சியங்களும் அவள் சிரிப்பின் முன்னால் துகள் துகளாகிறாற்போலத்தான் பட்டது. ஆத்திரத்தைக் கொட்டுகிறாற்போல என்பலவீனத்தையே காறி உமிழ்கிறாற்போலத் 'தூ' என்று துப்பினேன்.

அவள் முகம் வேதனையில் சுண்டிப்போய்விட்டது. மிக்க பரிதாபகரமாய்விட்டது. அந்தப் பலவீனத்திற்கு அடிபணிந்துவிடுவதற்கு நான் தயாராகவில்லை.

''மேல் விதானத்தில் கும்மாளமிடுகிற அழகுகள் இப்போது 'தூ' என்று ஆகிவிட்டதோ?'' என்று சொல்வது எனக்குக் கேட்டது. நான் பேசாமலே நடந்துவிட்டேன்.

என்னைத் தொடர்ந்து தொடர்ந்துவந்ததால் 'மேல் விதானத்தின் மேல் கும்மாளமிடுகிற அழகுகள்' எல்லாம் காறி உமிழ்கிறாற்போலாகிவிட்டது என்று நயம்படும்படியாய்த்தான் சொன்னாள்.

நண்பனை எங்கேயென்று தேடுவது? அவளிடமிருந்து தப்பி வீடு போய்ச்சேர்ந்துவிட்டாற்போதுமென்றுஆகிவிட்டிருந்தது. வீட்டிற்கு வந்து முதல் வேலையாய்க் காலலம்பிவிட்டு சுவாமி விவேகானந்தரின் திருப்படத்தின் முன்னால் நின்றபடி அவர் கண்களை உற்றுப்பார்த்தேன். எனக்கு அழுகை வீறிட்டுப்பெருகியது. அவர் பேசுமாப்போல இருந்தது.

'தம்பி'

எனக்குத்தேகம் புல்லரிக்க ஆரம்பித்துவிட்டது. மயிர்க்கால்தொறும் இலட்சியக் கனல் ஊர்ந்து உள் புகுந்து சுடுநீராய்ப் பெருகித்தகிக்கிறாற்போல இருந்தது. ஒரு நொடிதான். கனிவு சொட்ட அந்த அழைப்பு மாறிற்று.

'தம்பி, உன் எழுத்தில் தெரியும் பரிசுத்தங்கள் உன் பேச்சில், பார்வையில், நினைப்பில் ஏற்படும் பரிசுத்தங்களின் பிரதிபலிப்பாயிருக்கவேண்டும். இந்தச் சலனத்திற்கு நீ ஆட்படாதே. எழுத்தை நீ என் முன்னால் உன் இலட்சியமாய் ஏற்றுக்கொண்டாய். அதை நானும்

(II-ம் பக்கம் பார்க்க)

## கம்பன் என்றொரு மானிடன்

பண்டிதர் க. சச்சிதானந்தன்—

அழ கெனும் பொருள் அழிந்திடா இயல்பின
தறிந்தும்
பழகு செந்தமிழ்ப் பாவெனும் படைப்புனக்
கிருந்தும்
அழுகு மானிடர் உடல்படைத் தலுக்கவும்
விதியோ
ஒழுகு தேனிறை பங்கயத் தொருவனே
அயனே.

மல்லினு லுயர் தோளிலங்கேசனும் மயனும்
கல்லினுற் படைத்தருளிய மாளிகை கரைந்து
புல்லினுகிய தரையெனப் பொடிபடக் கம்பன்
சொல்லி னுகிய மாளிகை சுடர்விடு கிறதே

ஊனினுற் படைத் துருப்பெறக் கோசலை வயிற்றில்
ஆன இராமனே அமரினில் ஆயுத மின்றி
மோன மாகிய எதிரியைப் போவென மொழிந்து
போன இராமனே புவியினில் இன்று வாழ்கின்றார்

அமிழும் பாற்கடல் அமுதினுல் வாழ்பவர் அமரர்,
உமிழும் சொல்லெலாம் உயிருமிழ் கம்பனின் அமிழ்தத்
தமிழினுற் குழைத் தெழுதிய கிளிகளும் மயிலும்
கமழும் சோலைகள் தோறு நின் றுடுவ காணீர்.

அல்லின் மேனியை அழகெழ எழுதவும் இராமன்
வில்லினுக் குயர் கொடுக்கவும் வீழ்ந்து கீழ்ப்பட்ட
கல்லினுக் குயிர் கொடுக்கவும் கனிக்கவும் கம்பன்
சொல்லி னுக்கலால் நான்முகன் தொடமுடியாதே

கரும்பு கைத்திடும் அடிக்கடி கடித்திடில்; தேனும்
விரும்பு பாலுடன் வெறுப்புறும் பழகிடிற்; இராமன்
திரும்பு பார்வையிற் கம்பனின் சீதையின் கடைவாய்
அரும்பும் புன்னகை அழகது அலுத்திடு மாமோ

வண்ண மங்கையர் அழகெழு பசிகெடும் மருவ
பண்ணி னுலுறு பசிகெடும் வீணைமென் னிசையால்
உண்ண உண்ண வோர் ஓங்கிய பெரும்பசி கொடுக்கப்
பண்ணி னுன்கவி யெனப்பகர் அமுதினைப் படைத்தே

பூக்கள் ஆயிரம் பொலிவதும் ஒருவித அழகே
நோக்கு பெண்முக மாயிரம் நுகரழ கொன்றே
கோக்கும் ஒவ்வொரு சொல்லினும் விதம் விதம்
கொடுக்கப்
பாக்க ளாயிரம் பாடினன் மானிடக் கம்பன்.

19—4—66 முதல்
'ஈழநாடு' வாரமலரில்
ஆரம்பமாகிறது

அவன் சென்ற
பாதை

''சொக்கன்''
எழுதிய நாடகம்

கருத்தைக் கவரும்
கற்பனைச் சித்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் சிவாஜி - பத்மினி

ஒரு காலத்தில் தமிழ் சினிமா உலகில் நிரந்தர ஜோடிகளாக பவனி வந்து ரசிகர்கள் இதயங்களில தமக்கென்றோர் நிரந்தர இடத்தைப்பிடித்துக்கொண்டிருந்த சிவாஜி-பத்மினி ஜோடி இடையிலே ஏற்பட்ட பத்மினி திருமணத்தால் பிரிக்கப் படவேண்டிய நிலைமை ஏற்பட்டது. தான் இனி நடிக்கப்போவதில்லை யென்று பத்மினி அப்போது அறிவித்தார்.

இதனால் ரசிகர்கள்மிகவும் ஏமாற்றமடைந்தனர். சிவாஜி-பத்மினி ஜோடியை திரையில் ஒன்றாகக்காண முடியாது என்ற வருத்தத்தினால்! ரசிகர்கள் கவலை மறந்து, பத்மினியைக்கூட மறந்துபோயிருக்கும் இப்போது நமது காதுகளுக்கு ஒரு செய்தி எட்டுகிறது!

சிவாஜி-பத்மினி ஜோடி மீண்டும் திரையில் காட்சியளிக்க இருக்கின்றனராம்! கமலா பிக்சர்ஸ் படத்திற்கு ஏற்கனவே ஒப்பந்தமாகியுள்ள இருவரும் தற்சமயம் மற்றொரு படத்திற்கும் ஒப்பந்தமாகியுள்ளனராம்!

தமிழ்ப்படத் துறையில் புதுமை செய்யும் டைரக்டர் கோபாலகிருஷ்ணனின் அடுத்த படத்தில் அவர்கள் ஜோடிசேர்ந்துநடிப்பார்கள் என்ற செய்தி சினிமா உலக வட்டாரங்களில் பேச்சாக அடிபடுகின்றன. குடும்பமொன்றின் சுபிட்சத்திற்காக தன்னையே பலிகொடுக்கும் தாயொருத்தியின் கதையாக அது அமையும்.

## சிவாஜி நடித்த 100 படங்கள்

பத்மஸ்ரீ பட்டம் பெற்றுள்ள நடிகர் திலகம்சிவாஜி கணேசன் இதுவரை நடித்துள்ள 100 படங்கள் வருமாறு:

பராசக்தி, பணம், அன்பு' கண்கள், திரும்பிப்பார் பூங்கோதை, மனிதனும் மிருகமும், பரதேசி, அந்த நாள், இல்லறஜோதி, பெண்டு கொடுகு, எதிர்பாராதது, கூண்டுக்கிளி துளி விஷம், தூக்குத்தூக்கி கல்யாணம்பண்ணியும் பிரமச்சாரி, உலகம் பலவிதம், கள்வனின் காதலி, காவேரி, கோடீஸ்வரன், மனோகரா (தமிழ்), மனோகரா (தெலுங்கு) மனோகரா (ஹிந்தி), மங்கையர்திலகம், அமரதீபம், முதல்தேதி, நல்லவீடு தென்னாலிராமன், நானேராஜா பெண்ணின் பெருமை, நான்பெற்றசெல்வம், வாழ்வில் ஒருநாள், ரங்கோன் ராதா, அம்பிகாபதி, ராஜாராணி, தங்கமலை இரகசியம், பாக்கியவதி, புதையல்' மணமகன் தேவை, வணங்காமுடி, ராணி லலிதாங்கி, மக்களைப் பெற்ற மகராசி, அன்னையின் ஆணை, உத்தமபுத்திரன், ராஜபக்தி காத்தவராயன், சபாஷ் மீனா, சாரங்கதரா, தங்கப்பதுமை, பதிபக்தி' மரகதம், மருதநாட்டுவீரன், பொம்மைக் கல்யாணம், அவள் யார், எல்லாம் உனக்காக, வீரபாண்டியகட்டப்பொம்மன், குறவஞ்சி மர்மவீரன், ஸ்ரீவள்ளி, புனர்ஜென்மம், செந்தாமரை, 'வடிவுக்கு வளைகாப்பு, குழந்தைகள் கண்ட குடியரசு, வளர்பிறை இரும்புத்திரை, விடிவெள்ளி, கப்பலோட்டிய தமிழன், தெய்வப்பிறவி, படிக்காதமேதை, பாவை விளக்கு, நிச்சயதாம்பூலம், பாசமலர், பாவமன்னிப்பு, பாலுபழமும், ஆலயமணி, படித்தால்மட்டும்போதுமா, நான்சொல்லும் ரகசியம், அன்னைஇல்லம், பார்த்தால் பசிதீரும், பெற்றமனம் பந்பாசம், பலே பாண்டியா, இருவர் உள்ளம், அறிவாளி, கல்யாணியின் கணவன், இரத்த திலகம், சித்தூர் ராணி பத்மினி ஆண்டவன் கட்டளை, குலமகள் ராதை, குங்குமம், பார்மகளே பார், கர்ணன். பச்சை விளக்கு, புதியபறவை, பழநி, முரண்டமுத்து, கைகொடுத்த தெய்வம், நவராத்திரி.

தொகுத்து அனுப்பியவர்:, சி. சுதந்திரராஜா, தாவடி.

## படத்தயாரிப்பு பற்றி பானுமதி

'படம் தயாரிப்பது என்பது தனிப்பட்ட ஒருவரது சாதனை அல்ல. அது ஒரு கூட்டுக்கலை. இதற்குப் பலரது ஒத்துழைப்பும் தேவை. அந்த ஒத்துழைப்பும் உழைப்பும் தேவையான வர்களிடமிருந்து தேவைப்படும் அளவுக்கு வரும்போதுதான் படமும்சோபிக்கமுடியும்! விமாசகர்களின் பாராட்டையும் ரசிகர்களின் ஆதரவையும் பெறமுடியும் என பத்மஸ்ரீ பானுமதி தெரிவித்துள்ளார்.




# இம்மாத வெளியீடுகள்

பத்மினி பிக்சர்ஸ் தயாரித்துவரும் 'நாடோடி', சன்பீம் புரடக்ஷன்ஸ் தயாரித்துவரும் 'சாது மிரண்டால்!' விஜயகோபால் பிக்சர்ஸாரின் 'தேடி வந்த திருமகள்', உமையாள் புரடக்ஷன்ஸாரின் 'அவன் பித்தனா?' பி. எஸ். வீரப்பாவின் 'யார் நீ?', சக்தி புரடக்ஷன்ஸாரின் 'ஞாயிறும் திங்களும்', நடிகர் சந்திரபாபுவின் 'தட்டுங்கள் திறக்கப்படும்' ஆகிய படங்கள் இம்மாத நடுப்பகுதியில் திரைக்கு வரவிருக்கின்றன.

படங்கள் பற்றிய விபரங்கள் இதோ—

○ நாடோடி: எம். ஜி. ஆர்., ஈ. வி. சரோஜா, ஜோடியாக நடிக்கின்றனர். பி. ஆர். பந்துலு டைரக்ட் செய்துள்ளார்.

○ சாது மிரண்டால்: நாகேஷ், கல்பனா, சூர்யகலா, டி. ஆர். ராமச்சந்திரன், ஓ. ஏ. கே. தேவர், 'குட்டி" பத்மினி ஆகியோர் நடிக்கின்றனர்.

○ தேடிவந்த திருமகள்: எஸ் எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, ரவிச்சந்திரன், காஞ்சனா, நாகேஷ் ஆகியோர் நடிக்கின்றனர். சத்யம் டைரக்ட் செய்கிறார்.

○ அவன் பித்தனா?: எஸ் எஸ். ஆர்., விஜயகுமாரி ஜோடியுடன் சச்சு, புதுமுகம் உதயசந்திரிகா ஆகியோர் நடித்துள்ளனர். கலைஞர் மு. கருணாநிதி வசனம் எழுதியுள்ள இப்படத்தை பா. நீலகண்டன் டைரக்ட் செய்துள்ளார்.

○ யார் நீ: ஜெய்சங்கர்-ஜெயலலிதா ஜோடிசேர்ந்து நடித்திருக்கும் இப்படத்தை சத்யம் இயக்கியுள்ளார்.

○ ஞாயிறும் திங்களும்: சிவாஜி, ஜெமினி ஆகியோருடன் தேவிகாவும் நடித்துள்ளார். சடகோபன் டைரக்ட் செய்துள்ளார்.

○ தட்டுங்கள் திறக்கப்படும்: இப்படத்தின் கதையை சந்திரபாபு எழுதியிருப்பதுடன், தானே டைரக்ட் செய்துள்ளார். சந்திரபாபு சொந்தமாகத் தயாரித்துள்ள இப்படத்தில் ஜெமினி சாவித்திரியுடன் சந்திரபாபுவும் நடித்துள்ளார்.

## விஜயாவுக்கு யோகம் அடிக்கிறது!

குறுகியகாலத்தில் சினிமா உலகத்தில் தனக்கென்றோர் இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்ட நடிகை கே. ஆர். விஜயாவுக்கு இப்போது யோகம் அடிக்கத் தொடங்கியுள்ளது. ஏதோ ஒரு அதிர்ஷ்டம் அவரைத் தொட்டுக் கொண்டிருக்கிறதென்று கூடச் சொல்லலாம்!

'பட்டணத்தில் பூதம்', ஏ. எல். எஸ் ஸின் 'கந்தன் கருணை', கே. சி. பிலிம்சின் 'காலமெல்லாம் காத்திருப்பேன்', விஜயலக்ஷ்மிபிலிம்ஸ் 'சரஸ்வதி சபதம்', சிவாஜி பிலிம்ஸின் பெயரிடப்படாத படங்கள் ஆகியனவே இவர் நடித்துக் கொண்டிருக்கும் வண்ணப்படங்களாகும்!

# சபாஷ் எம். ஜி. ஆர்.

நம்ம 'மக்கள் திலகம்' எம். ஜி. ஆருக்கு எத்தனை சபாஷ் வேண்டுமானாலும் போடலாம்! 'கலங்கரை விளக்க'த்தைப் பார்த்த பிறகு எம். ஜி. ஆருக்குப் 'புரட்சி நடிகர்' என்று மக்கள் அளித்த பட்டம் எவ்வளவு தூரம் பொருந்துகிறதென்பதை உணரக்கூடியதாகவிருக்கிறது. 'கலங்கரை விளக்க'த்தில் எம். ஜி. ஆர். நடித்திருக்கிறாரா? அப்பப்பா! வில்லாகவளைகிறார், ஆடுகிறார், பாடுகிறார், சரோஜாவை படாதபாடு படுத்துகிறார். புரட்சிநடிகர் ரசிகர்கள் மனதில் கிளர்ச்சிசெய்து விடுகிறார். இந்த வயதில் இப்படி நடிக்கிறாரென்றால் - அவரை என்ன [illegible] டலாம்! எம். ஜி. ஆர். காலத்தில் நடித்தவர்களெல்லாம் அப்பா, பேரன் வேஷம் போடுகிறார்கள். ஆனால் எம். ஜி ஆரோ காலம் போகப்போக 16 வயது மார்க்கண்டேயனாக மெருகேறி சரோ. ஜெயலலிதா போன்ற 'சிறிசு'களுக்கு ஈடு கொடுத்து நடிக்கிறார்! அவர் தமிழ் திரையுலகுக்கு என்றும் பதினாறுவயது மார்க்கண்டேயன்தான்!

## பூதத்தைக் கண்டு நடுங்கினார் நாகேஷ்!

அந்தக் கல்லூரியைச் சேர்ந்த முத்தமிழ் மன்றத்தின் அந்தக்கவிதைப் போட்டியில் வெற்றிபெற்றவன் பாஸ்கரன். அதற்கு அவன் பெற்ற பரிசு ஒரு விநோத ஜாடி.

மூடப்பட்டிருந்த அந்த ஜாடிக்குள் என்ன இருக்கும் என்று பார்க்கவிரும்பினான் பாஸ்கரின் பிராண சிநேகிதன்-சீசர்சீனு என்பவன். அவ்வாறே மிகச்சிரமப்பட்டு அதைத் திறக்கவும் செய்தான்.

உடனே ஜாடியிலிருந்து புகைபுகையாகக் கிளம்பிற்று. அதையடுத்து ஒரு பூதம் வெளிவந்தது. சீசர் நடுநடுங்கிப் போய்விட்டான் ஆனால் பூதம் அவனைத்தேற்றத்தலைப்பட்டது. அவனுக்கு உதவிபுரிவதாகவும் உறுதி அளித்து 'என்னவேண்டும் உனக்கு?' என்று கேட்டது.

சீசர் தன் நண்பன் பாஸ்கரின் காதலை வெற்றியடையச்செய்யும் நோக்கோடு நிறையச்செல்வம் குவிய வேண்டும் என்றுகேட்டான். உடனே அங்கு தங்கக்கட்டிகள்தோன்றியதும் சீசரின் சந்தோஷம் தாங்கமுடியவில்லை.

இதெல்லாம் எங்கு நடந்தது? அந்தப் பூதம் இப்போது எங்கே உள்ளதுஎன்று கேட்காதீர்கள்.

சாரதா புரொடக்ஷன்சார் தயாரிக்கும் 'பட்டணத்தில் பூதம்' படத்தில் இப்பூதத்தை பார்க்கலாம். அப்படத்தில்தான் மேலே விபரித்த காட்சிகள் வருகின்றன.

சீசராக நாகேஷும், பாஸ்கராக ஜெய்சங்கரும், பூதமாக ஜாவர் சீதாராமனும், நடிக்கும்இப்படத்தின் கதை வசனத்தை ஜாவர்சீதாராமனும், காமிரா ரவியும், டைரக்ஷனை எம். வி. ராமனும் கவனிக்கிறார்கள்.

ஈஸ்ட்மென் கலரில் தயாரிக்கப்பட்டுவரும் இப்படம் விஜயாவில் வளர்ந்து வருகிறது.

## "திரும்பி வா ஒளியே திரும்பி வா!"

பத்மினி பிக்சர்ஸாரின் 'நாடோடி'க்காகச் சாரதாவில் டி. எஸ். ரங்கசாமியால் பாடல் ஒன்று பதிவு செய்யப்பட்டது.

'திரும்பி வா ஒளியே
திரும்பி வா'

என்று டி. எம். சௌந்தரராஜன் பாட,

'திரும்பி வா அறிவே
திரும்பி வா'

என்று பி சுசிலா பாடினார். எம். எஸ். விஸ்வநாதன் இசை அமைத்திருந்தார்.

பி. ஆர். பந்துலு டைரக்ஷனில் இப்படம் உருவாகி வருகிறது.

## சிற்பாலயா புரொடக்ஷன்ஸ் படம்

'சிற்பாலயா புரொடக்ஷன்ஸ் என்ற புதிய படக் கம்பெனியார் தமிழ்படமொன்றைத் தயாரிக்கிறார்கள்

பல புதுமுகங்கள்நடிக்கும் இப்படத்தின் திரைக்கதை, [illegible]ங்களை. நெல்லை சிவா எழுத. பாடல்களை தஞ்சை வில்லோன் எழுதுகிறார்.

## சந்திரோதயத்திற்கு பாடல் பதிவு

'சந்திரோதயம் ஒரு பெண் ஆனதோ
செந்தாமரை இரு கண் ஆனதோ
குளிர் காற்று கிள்ளாத மலரல்லவோ
கிளி வந்து கொத்தாத கனியல்லவோ
நிழல் மேகம் தழுவாத நிலவல்லவோ
நெஞ்சோடு நீ சேர்ந்த பொருள் அல்லவோ
என்னாளும் பிரியாத உறவல்லவோ!"

என்று எம் ஜி ராமச்சந்திரனும், ஜெயலலிதாவும் பாடும் காதல் காட்சிக்கென இப்பாடல் பதிவு செய்யப்பட்டது

சரவணா பிலிம்ஸ் தயாரிக்கும் 'சந்திரோதயம்' படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன், ஜெயலலிதா, நம்பியார், அசோகன், எம். ஆர். ராதா, நாகேஷ், பண்டரிபாய், புதுமுகம் பாரதி ஆகியோர் நடிக்கின்றனர்

## வி. கே. ஆர். படத்தில் மாறுதல்கள்

நடிகர் வி. கே. ராமசாமியின் தயாரிப்பைப்பற்றி பலவிதமான தகவல்கள் வந்துகொண்டிருப்பது தெரிந்ததே.

இப்பொழுது பி. எஸ். இராமையா எழுதிய கதையை அவர் படமாகத் தயாரிக்க இருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது!

இதன் திரைக்கதை வசனத்தை கே எஸ். கோபாலகிருஷ்ணன் எழுதுவதுடன் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றிருக்கிறார்.

சிவாஜி கணேசன், கே. ஆர் விஜயா, ரத்னா, நாகையா, ரங்கராவ், சகஸ்ரநாமம், எம் வி. ராஜம்மா, சுந்தரிபாய் ஆகியோர் நடிக்கின்றனர். இசையை கே. வி. மகாதேவன் அமைக்கிறார்.

## திரையுலகக் கலைஞரின் அறுபதாம் ஆண்டுவிழா

பழம்பெரும் நடிகர் பி. பி. ரங்காசாரியாரின் அறுபதாம் ஆண்டு நிறைவை விழாவாக சென்னையில் கொண்டாட ஏற்பாடுசெய்யப்பட்டு வருகிறது. அன்னார் கலைத்துறையில் ஆற்றிய பணியை கலைத்துறை நன்கு அறியும்.

தமிழகத்தில் நாடக மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த கலைமேதை திரு. கண்ணையா கம்பெனியின் முக்கிய ஒரு சில நடிகருள் இணைப்புலமையாக பங்கேற்று சுமார் 30 படங்களில் நடித்துள்ளார்.

## இரட்டைவேடங்களில் சிவாஜிகணேசன்

ஸ்ரீவிஜயலட்சுமி பிக்சர்ஸாரின் 'சரஸ்வதி சபதம்' ஈஸ்ட்மென் கலர்ப்படத்தில் சிவாஜிகணேசன் இரட்டை வேடங்களில் நடிக்கிறார்.

சரஸ்வதியின் சபதத்துக்குக்காரணமான நாரதராகவும் சரஸ்வதியின் அருள் பெற்று புலமை பெறும் வித்தியாதிபதியாகவும் அவர் நடித்துவருகிறார்.

## பத்மினி பிக்சர்ஸ் படம்

பத்மினி பிக்சர்சார் தமது அடுத்தபடத்தை ஏப்ரலில் வெளியிட வேண்டுமென்பதற்காகத்தீவிரமாகமுயன்று வருகின்றனர்.

அதில் எம் ஜி ராமச்சந்திரன், பி. சரோஜாதேவி, எம். என். நம்பியார், அசோகன், வி. கே. ராமசாமி, நாகேஷ், மாதவி, பாரதி, பேபி சகிலா ஆகியோர் [illegible]துவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டம்பியார் வருகிறார்! — 4

# 'அசோகா' சொக்கலிங்கத்தார்




'அசோகா' என்ற பிரபல வாசனைப் பாக்குத்தூள், பாக்கெட்டுகளில் முதன்முதலாவதாக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட காலம் அது. ஐந்தாம் வகுப்பில் எங்களை மேய்த்த சொக்கலிங்கம் மாஸ்டர் நூறு பாக்கெட்டுகள் அடங்கிய ஒரு பெரிய பார்சலை ஒவ்வொரு நாளும் கிளாஸுக்குக் கொண்டுவருவார். எந்த நேரமும் அவருடைய வாய் ஒவ்வொரு பாக்கெட்டை மென்று இரை மீட்டுக்கொண்டேயிருக்கும், அதற்கு ஒய்வு ஒழிச்சல் கிடையாது.

இதன் விபரீத பலன் என்னவென்றால் மாஸ்டருடைய நாக்கு பஞட்டுத் தட்டுப்போல் வீங்கித் தடித்திருக்கும். 'ஷால், ஷூட்' என்ற ஆங்கிலச் சொற்களை அவர் 'ஸால், ஸூட்' என்று உச்சரிக்கும்போது நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொள்வோம்.

சொக்கலிங்கம் மாஸ்டர் பள்ளிக் கூடத்துக்குள்ளேயே ஒரு புத்தகக் கடை வைத்திருந்தார். பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களும், கொப்பிகள், அடிமட்டம், பென்சில், அழிக்கும் ரப்பர் முதலிய மாணவ உபகரணங்களும் அந்தக் கடையில் எந்நேரமும் வாங்கிக்கொள்ளலாம் பள்ளிக்கூடம் துவங்கு முன்பும் விட்டபின்பும்தான் வியாபாரம் நடக்குமென்று மாஸ்டர் கண்டிப்பான சட்டம் விதித்திருந்தாலும், மத்தியான நேரத்தில் யாராவது ஒரு பாவிப் பையன் செம்மையான பிரம்படி வாங்கிக்கொண்டுவந்து அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக நின்று ஈனக்குரலில் 'கொப்பி வேணும் ஸேர்' என்று கெஞ்சும்போது சொக்கலிங்கம் மாஸ்டர் அந்தப்பரிதாபத்தைப்பார்த்துச் சகிக்காமல் தமது வகுப்பு மந்தையை விட்டு எழுந்து போய்விடுவார் கொப்பி விற்பதற்கு இங்கே 'அசோகா' பாக்கெட் அனுதையாகிவிடும். அதைச் சும்மாவிட்டுவைப்போமா? மாஸ்டர் திரும்பி வருவதற்குள் ஏழெட்டு சிறிய பாக்கெட்டுகள் எங்களுடைய கால்சட்டைப் பாக்கட்டுகளுக்குள் ஐக்கியமாகிவிடும்!

**வி. என். பி.**

சாம, பேத, தான, தண்டம் ஆகிய சதுர்வகை உபாயங்களில் பள்ளிக்கூடப் பையன்கள்மீது மாஸ்டர்மார் பிரயோகிப்பது அநேகமாக நான்காவது உபாயம் தான். அதுவே மிகச் சுலபமான முறை. ஆனால் தண்டம் அளிக்கும் முறையில் மாஸ்டருக்கு மாஸ்டர் வித்தியாசமுண்டு. சொக்கலிங்கத்தாரின் தண்ட விதிப்பு ஓர் அலாதியான போக்கு. தவறு செய்தவனைத் தமக்கருகில் அழைத்து, வைத்தியர் நாடி பிடித்துப் பார்ப்பதுபோல் கையைப் பிடித்துக்கொள்வார். சற்று நேரம் செல்ல பையன் 'ஊ' என்று குளறுவான். அவனுடைய கையில் நான்கு சிவந்த பிறைச் சந்திர வடிவங்களில் மாஸ்டர் தமது நகங்களைப் பதித்திருப்பார்.

என்ன இருந்தாலும் சொக்கலிங்கத்தார் எங்கள் கிளாஸ் மாஸ்டராய் இருக்கும்வரையில் எங்களுக்கு மிகவும் சந்தோஷம். அந்தக் காலத்தில் வருடத்துக்கு ஒரு தடவையாவது சோதனைகாரன் வித்தியாதரிசி) வருவார். அன்றைய தினம் மாணவர்களும் மாஸ்டர்மாரும் பலத்த நரம்புக் கோளாறுக்குட்பட்டு தீயில் மிதித்தவர்கள் போல நிற்பார்கள். எங்களுடைய வகுப்பில்மட்டும் அவ்வளவு படபடப்பு இருக்கமாட்டாது. ஏன் தெரியுமா? சோதனைகாரன் வந்து கரும் பலகையில் நாலைந்து கேள்விகளை எழுதிவிட்டு மற்ற வகுப்புக்குப் போய்விடுவார். அதற்குப்பின், வாசலில் நின்றுகொண்டு நாலாபக்கமும் ரோந்து பார்க்கும் கண்களுடன், சொக்கலிங்கம் மாஸ்டர், ஒவ்வொரு கேள்விக்கும் சரியான விடைகளை எங்களுக்குச் சொல்லித் தந்துவிடுவார்! பையன்கள் ஒருத்தன்விடாமல், எல்லோரும் சரியான விடை எழுதிவிட்டார்களே என்று சோதனைகார ஐயாவின் முகத்தில் ஒருவித அசட்டுப் பார்வையும் சிறு சந்தேகக் குறியும் தென்படும். ஆயினும் என்ன செய்வது?

சொக்கலிங்கத்தாரோ 'அசோகா'வை மும்முரமாகச் சப்பிக்கொண்டு ஒன்றுமறியாத உருத்திராக்கப் பூனை போல நிற்பார்!

# அடிசிற்கினியாள்

—செல்வி க. பூரணம் —

அப்பா அம்மாவிற்கு ஒரு மகள். மிகவும் செல்வமாக வளர்கிருள். பாலூட்டித் தாலாட்டி வளர்த்த செவிலித்தாய் மகளின் பணியெலாம் விருப்புடன் நிறைவேற்றுகிருள். மகளும் நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்ந்து இளம்பருவ நங்கையாகிருள். பெற்ருேர் தகுந்த வரனிற்கு அம்மங்கையை மணம் செய்து கொடுத்து மகிழ்வடைகின்றனர். எவ்வளவு வளர்ந்தாலும் பிள்ளைகளைச் சிறுவர்களாக நினைக்கும் பாங்கு அன்னையருக்கு இயல்பாக அமைந்த ஒன்றே, எனவே தனது சிறுமி புக்க இடத்தில் எப்படி வாழ்கிருளோ எனத் தாய் எண்ணி ஏங்குகிருள். நிலைமையைப் பார்த்துவரச் செவிலித்தாயை அனுப்புகிருள் 'கமகம' என்று நறுமணம் வீட்டுக்குச் செல்லும்போதே செவிலித்தாயின் மூக்கைத் துளைக்கிறது. மகளைக் கூப்பிட்டுச் சமையலைக் குழப்பாது நேரடியாக செவிலித்தாய் அடுப்பங்கரைக்குச் செல்கிருள். வாணல் சட்டியில் நெய்யில் தாளிசம் வதங்குகிறது. மகள் கட்டித் தயிரைக் கையால் பிசைகிருள். அவ்வேளை அவளது ஆடை நழுவுகிறது. கைகழுவினல் அடுப்பிலிருப்பது முறுகிவிடுமெனக் கழுவாமலே அழகான சேலையை அக்கையால் சொருகுகிருள். சமையல் முடிந்ததும், கணவனைப் பாங்காக உண்பிக்கிருள், கணவனும் மனைவியின் சமையல் மிக ருசியாக இருப்பதால் நன்று! நன்று! என்று நிறைய உண்கிருன். மனைவியின் இதயம் குளிர்கிறது. முகத்தில் புன்னகை மலர்கிறது. மகள் இல்லறத்தை இனிமையாக நடாத்துவதும் இருவரிடையும் அன்பு ததும்புவதும் செவிலியைப் பூரிக்கச் செய்கிறது. ஓடிச் சென்று நற்ருயிடம் நடந்ததெல்லாம் சொல்கிருள். அப்பொழுது அன்னை மகளைப் பெற்றபொழுதிலும் பெரிதுவக்கிருள்.

சங்ககாலத்தில் இல்லறத்தை இனிமையாகத் தலைவனும் தலைவியும் எவ்வண்ணம் நடத்தினர் என்பதை கூடலூர் கிழார் அழகாக இக் குறுந்தொகைப்பாடல் மூலம் படம்பிடித்துக் காட்டுகிருர்.

'முளிதயிர் பிசைந்த
காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங்கழா அ
துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை
கழுமத்
இனிதெனக் கணவ
னுண்டலின்
கண்ணிதின் மகிழ்ந்தன்
ருெண்ணுதல் முகனே'

—கூடலூர்கிழார்.

## தமாஷ்

### ஒரே நிமிடம்!

ஒரு 'தர்ம பத்தினி' தன் கணவனிடம் கூறுகிருள்:

''என்னங்க...! நான் பக்கத்து வீடுவரை போய் வருகிறேன். அடுப்பிலிருக்கும் சாம்பாரை அரைமணி நேரத்துக்கு ஒரு தடவை கலக்கிவிடுங்கள். நான் ஒரே நிமிடத்தில் வந்து விடுகிறேன்!''

★

### ஆ...ஆச்சரியம்

இருவர் இப்படியாகப் பேசிக்கொண்டனர்:

''சின்னஞ்சிறு கோழிக் குஞ்சுகள் முட்டையை எப்படி உடைக்கின்றன வென்பதை நினைக்கும் போது உங்களுக்கு ஆச்சரியமாகஇல்லையா?''

''அதைவிட ஆச்சரியம், எப்படி அவை உள்ளே புகுந்துகொண்டன என்பதுதான்.

★

### பரிசோதனை!

நோயாளிக்கு மருந்துகளை எழுதிக்கொடுத்து விட்டு, அவரிடம் டாக்டர் சொன்னுர்:

"மருந்துகளை ஒழுங்காகச்சாப்பிட்டுவிட்டு உடல் நிலை எப்படி இருக்கிறதென்று சொல்லுங்கள். நானும் இதே போன்ற நோயால் நெடுங்காலமாக அவஸ்தைப்படுகிறேன்.''

★

### சொல்லவில்லையே!

பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் நடைபெற்ற உரையாடல்:

ஒருவர்: நான் தான் நெப்போலியன்.

டாக்டர்: நீ நெப்போலியன் என்று யார்சொன்னது?

ஒருவர்: கடவுள் சொன்னுர்...!

''நான் சொல்லவில்லையே!'' என்று அப்போது ஒருவர் தூரத்திலிருந்து கத்தினுர்.

★

### புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

''அப்பா உங்களுக்கேன் முடியெல்லாம் நரைத்திருக்கிறது?''

''என்னசெய்வது! எல்லாம் உன்னுல் வந்ததுதான். நீ செய்யும் அட்டகாசங்களை எண்ணி எண்ணி, மனம் வருந்தித்தான் என்முடியெல்லாம் நரைத்துவிட்டது!''

"அப்படியானுல் தாத்தாவுக்கு உங்களை விட நரைத்திருக்கிறதே! நீங்கள் என்னைவிட அட்டகாசம் செய்திருக்கிறீர்கள், இல்லையா?

''....!....!.....''

— ராஜன்

# தெரிந்து கொள்ளவும்

இந்தோனேஷியாவில் சுமத்திரா, யாவா, போர்ணியோ, பாலி, செலிபிஸ், மொலுகஸ் முதலிய தீவுகளும், ஏறக்குறைய மூவாயிரம் சிறியதீவுகளும் அடங்கியுள்ளன. இந்தோனேஷியாவில் 25 முதன்மையான மொழிகளும், 250 இணைமொழிகளும் வழங்குகின்றன. ''பாஷா இந்தோனேஷியா'' என்னும் அரசாங்க மொழி கிழக்கு சுமத்திராவில் வழங்கும் மொழியாக உள்ளது.

★

இங்கிலாந்தில் ஒரு ஆள் ஓர் ஆண்டில் பயன்படுத்தும் தேயிலை 10 இருத்தல். ஆண்டில் இங்கிலாந்தில் இறக்குமதியாகும் தேயிலை 500 மில்லியன் இருத்தல்.

★

ஐக்கிய அமெரிக்காவில் வியோமிங் என்னும் இடத்தில் மஞ்சட்பூங்கா என்னும் இடமிருக்கின்றது இங்கு வென்னீர்ப்பீச்சு இருக்கிறது அது ஒவ்வொரு மணி நேரத்துக்கொருதடவை 13,000 கலன் வெந்நீரை வெளியே பீச்சுகின்றது. அது 130 அடி உயரம் செல்கின்றது. இப்பூங்காவில் ஏறக்குறைய 3000 வெந்நீரூற்றுக்களிருக்கின்றன.

★

துருவக்கரடி ஐரோப்பா, ஆசியா, வட அமெரிக்காவிலும், வடதுருவப்பகுதிகளிலும் காணப்படுகின்றது. இது, வால் முனையிலிருந்து மூக்குநுனிவரை ஒன்பதடி நீளமுடையதாகவிருக்கும். இஃது ஏறக்குறைய 1600 இருத்தல் எடையுடையதாகவிருக்கும் இதன் குட்டி பிறக்கும்போது 10 அவுன்ஸ் எடையுடையதாகும். ஒரு மனிதச் சிசுவின் எடை 7 இருத்தல்.

★

பதஞ்சலி என்னும் பெயருடைய பலர் வாழ்ந்தார்கள். இவர்களில் ஒருவர் யோக சூத்திரஞ்செய்தவர். (கி. மு. 2-ம் நூற்ருண்டு) இரண்டாவது பதஞ்சலி பாணினிமுனிவரின் இலக்கணத்துக்கு உரை செய்தவர். மூன்ருவது பதஞ்சலி, பதஞ்சலி தந்திரமென்னும் நூலியற்றிய மருத்துவர். புராணங்களில் வருபவர் இன்னெருவர்.

★

சட்டங்கள்: மிகப்பழைய சட்டங்கள் அமுரபி என்னும் பாபிலோனிய அரசனுல் (கி மு 2000) செய்யப்பட்டவை இச்சட்டங்கள் கல்லிற் பொறிக்கப்பட்டுள்ளன. இச்சட்டங்களுள் சில மிகவியப்பானவை. வைத்தியன் கூரிய ஆயுதங்களைக் கொண்டு காயங்களுக்குச் சிகிச்சை செய்யும்போது நோயாளி இறந்துவிட்டால் அல்லது வைத்தியன் கூரிய கருவிகொண்டு கண்சிகிச்சை செய்யும்போது நோயாளியின் கண் குருடாகிவிட்டால் வைத்தியனின் கைவெட்டப்படுதல்வேண்டும். வீடுகட்டும் கொத்தனெருவனுற் கட்டப்பட்டவீடு விழுந்து வீட்டுக்காரன் கொல்லப்பட்டால் கொத்தன் மரணதண்டனை பெறவேண்டும். வீட்டுக்காரனுடைய மகன் கொல்லப்பட்டால் கொத்தனுடைய மகன் மரண தண்டனை பெறவேண்டும்.

★

சியோகிரபி (Geography) என்னும்சொல்: வேதபாஷையில் கௌ என்பதுபசுவையும் பூமியையும் உணர்த்தும். கௌ என்பது கிரேக்க மொழியில் சியோ(Geo) என உச்சரிக்கப்படும். சியோஎன்பதிலிருந்து பூமிசாஸ்திரத்தைக் குறிக்கும் சியோகிரபி என்னும் சொல் பிறந்தது.

திரட்டு: என். எஸ். வே.

# எழில் தேங்க நெகிழ்ந்தனளே!

— ஆசி. செல்வன் —

நெஞ்சத் துணர்வுகள்
விஞ்ச எழிற்குவை
மஞ்சத் தமர்ந்திருந்தாள்-விழி
கொஞ்ச நிமிர்ந்திருந்தாள்.
பிஞ்சுக் கரங்களில்
பஞ்சுக் குழம்பினை
வஞ்சி அணிந்திருந்தாள்-செம்மை
மிஞ்சக் கனிந்திருந்தாள்.
தஞ்சம் எனவெனை
மஞ்சு விழிகளால்
தாவியணைத்திருந்தாள்-உயிர்
மேவி யணைத்திருந்தாள்
அஞ்சும் உணர்வினள்
துஞ்சும் கனியவள்
ஆவி யனையவளே-கலை
ஓவிய மன்னவளே!

○

கன்னிக் கனியவள்
சின்னக் கனியிதழ்
மெல்லத் துடித்திடுதே-அது
வெல்லச் சுவையமுதே
பின்னிப் பிணைந்திட
முன்னித் தவித்திடும்
என்னை அணைத்தனளே-வெறி
கண்ணை மறைத்திடவே.
உன்னும் உணர்வினில்
கன்னக் கதுப்புகள்
கன்றிச் சிவந்தனவே-விழி
ஒன்றிச் சிவந்ததுவே!
சின்ன அவளிதழ்
கண்ணின் வெளுப்பினை
வாங்கி மகிழ்ந்ததுவே-எழில்
தேங்க நெகிழ்ந்தனளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விந்தையான விபரங்கள்

### யானை

ஒரு யானை ஒருமுறையில் சராசரி 15 கலன் தண்ணீர் குடிக்கும்.

யானை ஈனும் அதன் குட்டியின் சராசரி நிறை கிட்டத்தட்ட 400 றுத்தல் ஆகும்

### சிங்கம்

சிங்கம் தனது நடுப்பருவத்தில் அதாவது அதன் 3 1/2 அடி உயரத்திலும் 10 அடி நீளத்திலும் 500 றுத்தல் நிறையுடையதாக இருக்கும்.

### காண்டாமிருகம்

காண்டாமிருகங்கள் தமது 12 அடி நீளத்திலும் 4 1/2 அடி உயரத்திலும்ஒவ்வொன்றும்சராசரி 4 தொன் நிறையுடையதாக இருக்கும்.

திரட்டு; ரவிசந்தர், சாவகச்சேரி.

# சூட்டியின் குறும்பு

— திருமதி இந்திராணி நல்லையா —

டில்க்கியும் சூட்டியும் சகோதரர்கள். டில்க்கி அறிவும் அருங்குணமும் நிரம்பிய சூடிகையான சிறுமி. சூட்டி சுட்டித்தனமும் குறும்புக்குணமும் மலிந்த துடிப்பான சிறுவன். சகோதரர்கள் இருவரும் தினமும் ஒன்ருகவே பாடசாலைகள் செல்வார்கள். டில்க்கி படிப்பில் அக்கறை ஊன்றி அமைதியாய் இருப்பாள். அவள் அருமைத்தம்பி சூட்டியோ துருதுருவென்று மற்றப்பாலகர்களுடைய சிலேட்டையோ, பென்சிலையோ புத்தகத்தையோ எடுத்து மறைத்துவிட்டு அவர்களை அழவிட்டு வேடிக்கை பார்ப்பதில் கவனமாயிருப்பான். தினமும் பள்ளியில் அவன் பொழுது இவ்வாறே இன்பமாகக் கழிந்து வந்தது. ஆசிரியரும் அவனைத் திருத்துவதற்கு பலவாறு முற்பட்டு தோல்வியுற்ருர். தம்பியின் செய்கையால் டில்க்கி மனம்நொந்தாள். தம்பியைத்திருத்த பல வழியில் முற்பட்டாள். முடியவில்லை. பலவாறு யோசித்து இறுதியில் திட்டம் வகுத்தாள்.

அன்று வழமைபோல் இருவரும் பாடசாலை சென்றனர். வகுப்புஆரம்பித்ததும் சூட்டி தனதுகுறும்மைஆரம்பிக்க முற்பட்டான். அதற்குள் அவனது சிலேட்டைக் காணவில்லை. வகுப்பறை முழுமையும்தேடியும் சிலேட்டைக்காணவில்லை. சிலேட்டில்லாத சூட்டியை ஆசிரியர் வகுப்பிற்கு வெளியே நிறுத்திவிட்டார். மற்றப் பாலகர்கள் சூட்டியைப் பார்த்து கேலிசெய்ய ஆரம்பித்தனர். அவனுக்கு அவமானத்தால் அழுகை குமுறி வந்தது. தானும் மற்றவர்கள் பொருட்களை மறைக்கும்போது அவர்களும் வருந்தியழுவது உள்ளத்தில் உறைந்தது. இனிமேல் அப்படிச் செய்வதில்லை என்று நினைத்து அழுதான். நெடுநேரம் அழும் சூட்டியைக் கண்டு மனமிரங்கிய டில்க்கி, மறைத்து வைத்திருந்த அவனது சிலேட்டைக் கொடுத்து ''இனிமேல் மற்றவர்கள் பொருளை மறைத்து வைத்து வருத்தாதே. நீ வருந்தியதுபோலவே அவர்களும் வருந்துவார்கள். அப்படிச் செய்யாதே. அது பாவம்'' என்று புத்திமதி கூறினள். மனம் மாறிய சூட்டியும் அப்படியே செய்வதாகத்தலையை அசைத்தான். அன்றிலிருந்து சூட்டி பிறர்பொருளை எடுத்து மறைப்பதில்லை. நல்லபிள்ளையாகி, படிப்பில் கவனம் செலுத்தத் தொடங்கினன். சூட்டியின் திருந்திய குணத்தைக்கண்டு டில்க்கியும் ஆசிரியடும் மகிழ்வுற்றனர்.

நான் ஒரு உதவியும் முன்செய்யாதிருக்க, பிறன் தனக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைமாருகக் கொடுத்தாலும் ஈடு ஆக முடியாது.

—திருவள்ளுவர்

## உங்கள் நினைவுக்கு

யூகோஸ்லேவியா நாற்பத்து ஒன்று-நாற்பத்து ஏழாவது வட அட்சரேகைக்கும், பதின் மூன்று-இருபத்து மூன்ருவது கிழக்கு தீர்க்கரேகைக்குமிடையில் அமைந்துள்ளது. இந்த நாடு மத்திய ஐரோப்பியா நேரமண்டலத்துக்குள்ளும் உள்ளது. ஆட்டிறியாட்டிக்துறைமுகம் அநேக மத்திய ஐரோப்பிய நாடுகளுக்கு (ஆஸ்திரேலியா, ஹங்கேரி, செக்கோஸ்லேவியா) அருகாமையில் உள்ளதால், யூகோஸ்லேவியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைகின்றது. வாவிகள் இங்கு அநேகமுண்டு. அவற்றுள் பிளிட்டிவிக்கா வாவி, பிலெட்வாவி, ஒஹிறிட்வாவி ஆகியவை வனப்புக்குப் பெயர் போனவை. நாவாய்ப் போக்குவரத்து செய்யக் கூடிய ஆறுகள் சமவெளியூடாகப் பாய்கின்றன. இங்குள்ள நீர்வீழ்ச்சிகள் பார்ப்போரை மெய்மறக்கச் செய்கின்றன. யூகோஸ்லேவியாவின் ஆட்டிறியாட்டிக்கரையோரப்பகுதி 'ஆயிரம் தீவுகளின்கரை' என அழைக்கப் படுகின்றது.

பூமியின் பாங்கைவிட்டுக் கூறும்பொழுது யூகோஸ்லோவியாவின் நிலப்பரப்பில் எழுபத்தைந்து விதமும் மலைப்பாங்கானது மிகுதி சமபூமியாகும். இங்குள்ள மலைகள் எல்லாம் ஒன்றுக்கு ஒன்று போட்டியாக உயரமாகவே உள்ளன சில மலைச் சிகரங்கள் 3,000 மீட்டர் உயரமுள்ளவை. யூகோஸ்லேவியாவின் மொத்த நிலப்பரப்பு 225,804 சதுர கில்லோ மீட்டராகும். இன்றைய நிலப்பரப்பு யுத்தத்திற்கு முந்திய நிலப்பரப்பிலும் 8,262 சதுர கில்லோ மீட்டர் அதிகமுடையதாக உள்ளது. தென் கிழக்கு ஐரோப்பாவில் இதுவே பெரிய நாடாகும். ஆனல் ஐரோப்பிய கண்டத்தில் உள்ள நாடுகளில் இத்தாலிக்கும், பிரித்தானியாவுக்கும் இடையில் இது ஒன்பதாவது இடத்தை விசாலத்தில் கொண்டுள்ளது. சனத்தொகையில் 1964-ம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் தற்சமயம் யூகோஸ்லேவியாவில் 19,000,000 மக்கள் உளர்.

—கே. ரி. ஆர்.

# சிறுவர் பூங்கா



## வண்ணக்கிளி

— செ. மகேந்திரன் —

தேன்மொழி கொண்டிசை பாடுவதும் -பழம்
தின்று குறும்புசெய் தாடுவதும்
வான்பறந் தின்பம் சுவைப்பதுவும் - எழில்
வண்ணக் கிளிக்குயர் வேலையடா!

○

செந்நிறம் தீட்டிய நல்லதரம் - இரு
செட்டைகள் பூட்டிய வானரதம்.
எவ்வுயிர்க்கும்துயர் செய்வதில்லை - பறந்(து)
என்றும் உழைத்திடும் பாருங்கடா!

○

பச்சைநிற வண்ணப் பைங்கிளிதான் - இசை
பாடிப் பறப்பதும் அக்கிளிதான்.
கொச்சைமொழி சொல்லும் நற்கிளிதான்-எந்தன்
கூட்டில் இருப்பதும் அக்கிளிதான்.

# கணவருக்கு உதவிடும் குடும்ப சிக்கனம்

இக்காலப் பெண்கள் ஓரளவு படித்தவுடன் உத்தியோகத்திற்காகத் தேடி அலைகின்றனர். ஆண்களைப்போல் உழைத்து தாங்களும் வாழ வேண்டுமென்று ஆசைப்படுகின்றனர். ஆனல் இந்த உத்தியோக ஆசை அறவே பெண்களைவிட்டுவிலகவேண்டும்.

உழைத்தப்பின் களைத்து வீடு நோக்கிவரும் கணவனை இன்முகம் கொண்டு வரவேற்று உபசரிக்கவும், குடும்ப வருவாயைச் சிக்கனமாகச் செலவு செய்து நிலைமையைச் சமாளிக்கவும், குழந்தைகளின் உடல் நலம்,

## கருந்தரங்கம்

கல்வி முதலியவைகளைக் கவனித்துப் பேணி வளர்க்கவும், சுவையான பதார்த்தங்களைக் கட்டுமட்டாகவும், சுத்தமாகவும், சமைத்து கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் பரிமாறவும், வீட்டினை அமகுபடுத்தவும், வேண்டிய உடுப்புகளைச் சிக்கனமாகவும், அழகாகவும்தைத்து, தையல் கூலியை இல்லாது செய்யவும், இன்னும் வேறு கருமங்களையும் புரிந்து குடும்பத்தை வழி நடத்திச் செல்லவும் வேண்டிய பெண் உத்தியோக மோகங்கொள்வது விரும்பத்தக்கதன்று.

எனவே கணவனுக்குதவியாக வெளியில் சென்று தொழில் பார்க்கும் ஆசையை அகற்றி ''போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து'' என்பதற்கிணங்க கணவனின் வருவாயில் திருப்திகொண்டு இல்லறத்தரசியாக வாழ்வதே பெண்ணிற்கு அழகு.

—புவனராணி




பெண்கள் விடுதலை பெற்ற
மகிழ்ச்சிகள்
பேசிக் களிப்பொடு நாம்
பாடக்
கண்களி லேயொளி போல
வுயிரில்
கலந்தொளிர் தெய்வம்
நற் காப்பாமே.

—பாரதியார்

பெண்கள்

## அழகாக இருக்க.....

—பாமா—

பொதுவாகப் பெண்கள் உடலை அழகாக வைத்துக் கொள்வதே அவர்களுக்கும், அவர்தம் இதயம் கவர்ந்தவர்க்கும் பெருமை.

கவர்ச்சி, அழகு, இன உணர்ச்சி, நட்சத்திர முக லாவண்யம்—இவை எல்லாவற்றையும் சேர்த்துத்தான் எழில் என்கிருர்கள்.

அழகிகள் என்று உலகத்தாரால் புகழ்மாலை சூட்டப்பட்டவர்களுக்குக்கூட, 'தாங்கள் அழகியல்ல குரூபி' என்ற பயம் இருக்கிறது. நாள்தோறும் தங்கள் அழகை இழந்துவருவதாக எண்ணுகிருர்கள். ஆனல் உலகமோ நாள்தோறும் அவர்கள் புது அழகைப் பெற்றுவருவதாக நினைக்கிறது!

உலக வாலிபர்சளின் உள்ளங்களைக்கொள்ளைகொண்ட நடிகை பிரிஜெட்பாடோ நிலைக்கண்ணாடி முன் அமர்ந்து சீவிச் சிங்காரிக்கிருள். ஆனல் பாடோவுக்கோ ஒரே கவலை! ''நான் எப்படிப் போட்டோ எடுத்துக்கொள்ளப்போகிறேன்; என்னுடைய அழகை இழந்துவிட்டேனே!'' என்று கவலை கொள்கிருள்.

''உங்கள் அழகைப்பெற உலகிலுள்ள பெண்கள் அனைவரும் துடிதுடித்துக்கொண்டிருக்கிருர்கள்'' என்ருர் படோவைப் போட்டோ எடுத்தவர்.

ஆகவே—அழகிகள்கூட தங்கள் அழகில் சந்தேகம் இருப்பதைப் பார்க்கும்போது, சாதாரணமானவர்களுக்கு அது இருப்பதில் ஆச்சரியமில்லை.

இயற்கையாக அழகில்லாமல் இருப்பவர்கள் விதம் விதமான ஆடை அணிகளை அணிந்து தம்மை அழகுள்ளவர்களாக்கிக்கொள்வதில் எதுவித தவறுமில்லை. ஆனல் இயற்கையாக அழகிருப்பவர்கள் அதிகமான ஆடம்பர துணிமணிகளை அணிவதன்மூலம் தங்கள் அழகை மறைத்துவிடுகிருர்கள்.

சுருக்கமாகச் சொன்னல், பெண்கள் நடப்பதிலும், பேசுவதிலும், சிரிப்பதிலும் அழகை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். அது அழகிற்கு அழகூட்டுகிறது; அழகின்மைக்கு அழகைத் தருகிறது!

# சித்திரை நங்கை

— பூரணி —

மங்கையர் வதனங்களெல்லாம் அன்றலர்ந்த தாமரைபோல் மலர்ந்திருக்கின்றன. கூட்டிப்பெருக்கிய வீட்டில் குங்குலிய நறுமணம் கமழ்கிறது. பராபவ மங்கையை வருக வருக எனப் பூரண கும்பங்கள் வரவேற்கின்றன.

அகிலமெலாம் அன்பு பொங்க அறிவு சுடர்விட இன்பம் மலிய இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை வாசக நேயர்களுக்கு ''குடும்பச்சுடர்'' தெரிவித்துக் கொள்கிறது.

உள்ளக்கிளு கிளுப்புடன் உவகை பொங்க வரவேற்கும் உள்ளங்களைக் கண்டு சித்திரை நங்கையின் இதயம் பூரிப்பால் விம்முகிறது. செல்வருந்தோம்பி வருவிருந்து காத்திருக்கும் நங்கையர் குழாம் மருத்துநீர்தேய்த்து முழுகிப் புத்தாடைஅணிந்து கோவில் சென்றுவந்து பத்துவித உணவுகளை உற்ருர் உறவினர், விருந்தினர் புடைசூழ பாங்குடன் உண்பதோடுமட்டும் அமையவில்லை. தங்கள் குடும்பம் சுடர்விட, நாடு நலமுற, உலகம் வளமுற உண்மையாக உழைத்திட புத்தாண்டில் உறுதிசெய்கின்றனர். இதோ அவர்கள் பிரதிக்கினை;

'உடையவள் சக்தி ஆண்
பெண்ணிரண்டும்
ஒரு நிகர் செய்துரிமை
யமைத்தாள்;
திறமையால் இங்கு
மேனிலை சேர்வோம்
தீய பண்டை இகழ்ச்சிகள்
தேய்ப்போம்
குறைவிலாது முழுநிகர்
நம்மைக்
கொள்வ ராண்களெனின்
வரொடும்
சிறுமை தீரநந் தாய்த்திரு
நாட்டைத்
திரும்ப வெல்வதில் சேர்ந்
திங் குழைப்போம்'

சங்க கால மகளிர்போல இக்கால மகளிரும் வீரக் காரிகைகளாய் விளங்கிட விழைகின்றனர். சுயநல வேலியால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள பூமியை எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதன்றி வேறென்றறியா உள்ளத்துடன் பிரித்தெறிந்திட நங்கையர் உளம் நானிலத்தை நண்ணுகிறது.

பெண்கள் வெறும் பொழுதுபோக்குக்குரிய விளையாட்டுப் பொம்மைகளாகவும், விரும்புகின்றபோது அழகாக வாசித்துவிட்டு மூலையில் போட்டுவிடுகிற வீணைகளாகவுமே ஆண்களில் சிலர் நினைக்கிருர்கள்.

— சரு ராமநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவில்களில் வளர்ந்த தமிழர் கலாசாரம்

தமிழகத்தின் கலாச்சாரம் மிகப் பழமையானது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கலைகளை இன்னும் நாம் காணமுடிகிறது. கோவில்கள், கல்வெட்டுகள், கோட்டை கொத்தளங்கள், செம்பு விக்கிரகங்கள் முதலிய பண்டைச்சின்னங்கள் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுகின்றன. அநேகமாக ஒவ்வொரு கிராமத்திலும் இவற்றில் ஏதாவது ஒரு சிறப்பத்தைக் காணலாம். இவை தமிழகத்தின் தொன்மையான நாகரிகத்தை எடுத்துக்கூறுகின்றன.

### கோவில்கள் வாழ்வின் அடிப்படை

பண்டைய தமிழகத்தில் கோவில்கள் முக்கிய ஸ்தானம் வகித்து வந்தன. "கோவில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்றுநம்முன்னோர்கள் கூறினார்கள். கோவில்களுக்கு கோட்டம், பள்ளி என்ற பெயர்களும்இருந்துவந்தன. பெருங் கோவில், இளம் கோவில், பூங்கோவில், தூங்காமாடம் என்ற பலவகைக் கோவில்கள் இருந்ததை அப்பர் பெருமான் தேவாரத்திலிருந்து அறிகிறோம். மக்களிடையே பக்தியை வளர்க்கவும் தங்கள் புகழ்நிலைத்து நிற்கும்படிசெய்யவும், அரசர்கள் ஆலயங்களை நிர்மாணித்தார்கள். தாங்கள் அடைந்தவெற்றியின் நினைவாகவும், அரசர்கள்கோவில்களைக்கட்டினார்கள். கங்கை கொண்டசோழபுரம், இந்த வகையில்வெற்றியைக்குறிக்கும் சின்னமாகும். இறந்தவர்களுடைய நினைவாகவும் கோவில்கள் அமைக்கப்பட்டன. இக்கோவில்கள் ஆகம சாஸ்திர விதிகளுக்கு ஒப்பக் கட்டப்பட்டன. ஆலய நிர்மாணத்தைப்பற்றிய நூல்கள் சங்க காலத்திலேயே இருந்ததாக அறிகிறோம்.

ஆயிரத்துமுன்னூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஆண்ட பல்லவர்கள், மலைகளைக் குடைந்து குகைக் கோவில்களை அமைத்தார்கள் பெரிய பாறைகளைச் செதுக்கி அமைக்கப்பட்ட ரதங்களை மாமல்லபுரத்தில் காண்கிறோம். அதேபோல, பாண்டியமன்னர்களால் தெற்கே குகைக்கோவில்கள் அமைக்கப்பட்டன. பின்னால் வந்த சோழர்கள், தமிழகம்முழுவதிலும் மிகப்பெரிய கோவில்களைக் கட்டினார்கள். பெரிய மண்டபங்களையும், கோபுரங்களையும் நிர்மாணித்தார்கள். விஜயநகர மன்னர்களும், நாயக்கமன்னர்களும் கோவில்களுக்கு ஏராளமான திருப்பணிகள் செய்திருக்கிறார்கள்.

இந்தக்கோவில்களில், பூஜைசெய்வோர் கணக்கர், மெய்க்காப்பாளர் திருப்பதிகம் ஓதுவார், இசைக்கருவிகளை மீட்டுவோர், தச்சர், குயவர் முதலியபல பணியாட்கள் இருந்தனர். கோவில்களில் வழிபாடுகள் அந்திசந்திதோறும் சீராக நடந்து வந்தன. இசையும் கூத்தும் இறைவழிபாட்டின் அங்கமாகவே இருந்ததால், இக்கலைகள் சிறந்த நிலையில் இருந்தன. மக்களுக்குச் சிறந்த பொழுது போக்காக அமைய நாடகங்களும், புராண உபந்நியாசங்களும் நடந்தன. மற்ற எல்லா அருங்கலைகளும் கோவில்களில் வளர்ந்தன.

பண்டையகிராமமக்களின் வாழ்க்கை முழுவதுமே, கோவிலை அடிப்படையாகக் கொண்டு இயங்கியது. கோவில்கள், மக்களுக்கு வழிபாட்டுக்குரிய இடமாகவும், கலைக்கூடமாகவும் இருந்தன. நீதி வழங்கும் ஸ்தலங்களாகவும் அவை விளங்கின. ஒவ்வொரு பெரிய கோவிலிலும் கல்வி நிலையங்கள்இருந்தன. வைத்திய சாலைகள் இருந்தன. கிராமசபைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுஅங்கேகூடிப் பணிபுரிந்தன. ஒவ்வொரு ஊரிலும் பெரும்பாலான நிலங்கள் கோவிலின் மானியச் சொத்துக்களாக இருந்தன. அவற்றை கிராமசபைகள் கண்காணித்தன. கோவில்நிலங்களையும் மற்ற சொத்துக்களையும் யாரும் கையாடாமல் சுமார்ஆயிரம் ஆண்டுகளுக்குமேல்அச்சபைகள் காத்துவந்திருக்கின்றன. அரசுகளும், ஆட்சியும் மாறிய போதும் அச்சபைகள் சீராகப்பணிபுரிந்ததின் பயனாக,தமிழ்நாட்டில் சமாதானமும் சுபிட்சமும் நிலவின.

கோவில்களுக்கு அரசர்கள் மானியங்கள்அளித்தார்கள். அந்த மானிய விபரங்கள், அந்தந்தக் கோவில்களின் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்றஆயிரக் கணக்கான கல்வெட்டுக்களை தமிழகத்தில் காணலாம். மானியம் வழங்கும் அரசரின் கீர்த்தியையும், யாருக்கு எதற்காக மானியம் என்ற விபரங்களையும் அவை தெளிவாகக் கூறுகின்றன. இந்தக் கல்வெட்டுக்களைக் கொண்டு ஒவ்வொரு ஊரின் சரித்திரத்தையும் அறியலாம். 400, 500 ஆண்டுகளாகத் தெருக்களின் பெயர்கள்கூட மாருமல் இருப்பதைக் காண முடிகிறது.

### பண்டைக்கால குடியாட்சி முறை

குடவோலைச் சீட்டு முறையில் அமைந்த குடியாட்சி முறை இருந்ததை நாம் அறியமுடிகிறது. கல்வி நிலையங்கள், பல்வேறுதரப்பு மக்கள் நிலை, அரசியல், பொருள் இயல், சமூக இயல் அனைத்தையும் குறித்து, இக்கல்வெட்டுக்களிலிருந்து அறியலாம். தமிழ் எழுத்துக்களும் சமஸ்கிருத எழுத்துக்களும் அன்று இருந்ததுபோல் இன்று இல்லை. படிப்படியாக பல மாறுதல் பெற்று, இன்றைய நிலையை அடைந்திருக்கின்றன. அம்மாறுதல்களையும் கல்வெட்டுக்களிலிருந்து அறிய முடிகிறது.

பண்டைய அரசர்கள் எதிரிகள் ஏறமுடியாத மலைமீது சிறந்த கோட்டைகள் கட்டி வாழ்ந்தார்கள். ஆயுதக் கிடங்குகள், உணவுக் கிடங்குகள், கண்காணிப்பு மாளிகைகள் முதலியன அக்கோட்டைக்குள் அமைக்கப்பட்டன. கோட்டைகளை எப்படி அமைப்பதென்று கூறும் நூல்கள் இருந்தன. செஞ்சி, வேலூர், திண்டுக்கல், சங்ககிரி முதலிய இடங்களில் இன்னும் கோட்டைகள் இருப்பதைக் காணலாம். மதுரையில் திருமலை நாயக்கர் மஹாலும், தஞ்சையில் அரண்மனையும் அக்கால அரசர்களின் கட்டடக் கலைச் சிறப்பைக் கூறுகின்றன.

### சிந்தனையைத் தூண்டும் சிற்பக் கலை

தமிழகத்தில் மிக விரும்பிப் போற்றப்பட்ட கலைகளில் ஒன்று சிற்பக் கலை. கண்ணகிக்குச் சிலை வடிப்பதற்காக சேரன் செங்குட்டுவன், இமயமலையிலிருந்து கல் கொண்டு வந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. சிற்பங்களின் அளவுகள் படிவங்களை எப்படி அமைக்க வேண்டுமென்று கூறும் சிற்பக்கலை நூல்கள் அக்காலத்தில் இருந்தன. போரில் வீர மரணம்அடைந்தவர்களுக்கு வீரக்கல் நாட்டினார்கள். மன்னர்கள், ராணிகளின் உருவச் சிலைகள் பலவும் உள்ளன. வடிக்கப்பட்ட சிலைகளில் பெரும்பாலானவை தெய்வச்சிலைகளாகும். பல்லவர்கள்,பாண்டியர்,சோழர், விஜயநகர மன்னர்கள், நாயக்க மன்னர்கள் இவர்கள் காலத்துச் சிற்பங்கள் தமிழ் நாட்டுக்கோவில்களில் ஏராளமாக இருக்கின்றன. இவை மனம் கவரும் அழகு வாய்ந்தவை. இதேபோல தமிழ் நாட்டு செம்பு விக்கிரகங்களும் உலகப்புகழ்பெற்றிருக்கின்றன. குறிப்பாகத் தில்லை நடராஜர் உருவச் சிலை அமைப்பில் பொதிந்துள்ள தத்துவம் மக்கள் அனைவராலும் வியந்து போற்றப்படுகிறது. சோழ மன்னர்கள் கோவில்களுக்காக அமைத்துக் கொடுத்த தெய்வ விக்கிரகங்கள் பல ஆலயங்களில் இன்னும் பூசிக்கப்பட்டுவருகின்றன.

ஓவியக்கலையும் தமிழ்நாட்டில் சிறப்பாகப் போற்றப் பட்டுவந்திருக்கிறது. நமது சங்க நூல்களில் ஓவிய விதானங்கள்பற்றியும் சித்திர மண்டபங்கள்பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. சித்தன்னவாசல், தஞ்சாவூர், சிதம்பரம் மதுரை முதலிய இடங்களில் உள்ள பழைய ஓவியங்களைத் தமிழர்களின் ஓவியக் கலைத் திறமைக்குச் சான்ருகக் கூறலாம்.

### வரலாற்றுப் புகழ்பாடும் வண்ணக் களஞ்சியம்

இந்தச் சின்னங்களும், சிலாசாசனங்களும் நமது சரித்திரத்தைக் கூறுகின்றன. தொன்று தொட்டு நாம் பண்பாட்டில் சிறந்த மக்கள் என்பதைத் தெரிவிக்கின்றன, நமது முன்னோர்கள் இவற்றைச்செய்து முடித்து, நமக்கு விட்டுச் செல்வதில் பெருமை அடைந்தார்கள். கிராமசபைகள் எல்லாம் இக்கலைச் செல்வங்களைக் காத்துவந்தன. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இவைகளைக் காத்து நமக்குத் தந்திருக்கிருர்கள் பெருமைக்குரிய இச் சொத்தை இனிவரும் சந்ததியார் பெறவேண்டும். அவர்களுக்கு இதைக் காத்துத் தரவேண்டிய பொறுப்பு நம்மைச் சேர்ந்தது.

வான் அளாவும் கோவில்கள், அழகு மிகுந்த சிற்பங்கள், கண்கவர் ஓவியங்கள், பக்தி உணர்வூட்டும் தெய்வ விக்கிரகங்கள் இவை தமிழ் நாட்டில் எங்கும்இருக்கின்றன. இவற்றையெல்லாம் மக்கள் சென்று பார்க்கவேண்டும்; கண்டு களிக்கவேண்டும். அத்துடன் இவை அழிந்துவிடாமல் காக்கவேண்டும். அந்தந்த ஊர்களிலுள்ள கலைச்செலவங்களை அந்தந்த ஊர்மக்களே காக்கவேண்டும். முக்கியமாக சமீபகாலத்தில் இது மிகவும் அவசியமாகிறது. காசுக்காக ஒரு சிலர் இந்தத் தெய்வீகச் சிலைகளைத் திருடி விற்கமுற்படுகிருர்கள். கலை உணர்ச்சியற்ற சிலர் இச்செல்வங்களைப் பழுதுபடுத்துகிருர்கள். இத்தகைய விஷமங்களுக்கு இடமில்லாதபடி செய்வதில் மக்கள் ஒத்துழைப்பது அவசியமாகும்.

உலகின் பல்வேறு நாடுகளும் தங்கள் கலைச்செல்வங்களைப் பாதுகாத்துப் பெருமை அடைகின்றன. நமது கலைச்செல்வங்களைக் காப்பதில் நாம் விசேஷ அக்கறைகாட்டவேண்டும். அரசாங்கமும் தொல்பொருள் துறை ஏற்படுத்தி இதற்கு ஆவன செய்துவருகிறது. இந்தப்பணியில்மாணவர்களுக்குப்பெரும் பங்கு உண்டு. நமது வரலாற்றுப் பாரம்பரியத்தை அறிவதில் நம் மாணவர்கள்சமீபகாலத்தில் சிறந்த ஆர்வங்காட்டி வருகிருர்கள். மாணவர்கள் நமது கலைச் செல்வங்களைக் கண்டுகளிக்கவேண்டும். கல்வெட்டுக்களைப் படிக்கக்கற்றுக்கொள்ளவேண்டும். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இதற்கான ஆர்வத்தை வளர்க்கவேண்டும். அப்போதுதான் நம்முன்னோர்கள் விட்டுச்சென்ற கலைச் செல்வங்களையும் பண்பாட்டையும் காத்தபெருமை நம்மைச்சேரும்.

**திரு. எம். பக்தவத்சலம்,** சென்னை முதலமைச்சர்

---

## நம்பலாம் நடந்தது!

### காந்திஜியின் நித்திரை

காந்திஜி எந்தக்காரியத்தையும் குறிப்பிட்ட காலத்தில் செய்துமுடிப்பார். ஐந்து மணிக்கு ஒரு கூட்டத்தில் பேசுவதாகஒப்புக்கொண்டால் சரியாக ஐந்து மணிக்கே அங்கு போய்விடுவார். ஒரு நிமிடம் கூட தாமதம் செய்யமாட்டார். சாப்பிடுவது, தூங்குவது முதல் ஒவ்வொரு காரியமும் மணிக்கணக்குப் பிரகாரம் நடக்கும்!

அவர் வழக்கமாக பிற்பகலில் 15 நிமிட நேரம் தூங்குவதுண்டு. படுத்துக்கொண்ட பதினைந்தாவது நிமிடம் எழுந்துவிடுவார். யாரும் அவர் தூக்கத்தைக்கலைக்கமுடியாது, எக்காரணம் கொண்டும்!

ஒரு முறை காந்திஜியும் வேறு சில தலைவர்களும் மோட்டார் வண்டியில் வந்துகொண்டிருந்த போது மோட்டார் ஒரு மரத்தில்மோதி குப்புறக் கவிழ்ந்துவிட்டது. மோட்டாரில் இருந்தவர்கள் எழுந்து காந்திஜி என்ன செய்கிருர் என்று பார்த்தனர்.

அவர் நன்ருகத்தூங்கிக் கொண்டிருந்தார். அது பிற்பகல் நேரம் - வழக்கமாக அவர் தூங்கும் நேரம்.

பதினைந்து நிமிடம் அவர் தூங்கிய பின்னர் தான் எழுந்தார்!

### தன்னையே தூக்கிலிட்டான்

'ரீஜண்ட்' என்ற 140 காரட்எடையுள்ளவைரம் இந்தியாவில் ஓர் அடிமையினிடமிருந்துகண்டுபிடிக்கப்பட்டது. காவலாளர்களிடமிருந்து தப்புவதற்காகத் தன் தொடையைக் கிழித்துஅதனுள்மறைத்து வைத்துக்கொண்டு ஓடிவிட்டான்.

ஒரு பிரிட்டிஷ் கப்பற்படைத்தலைவன், அந்த அடிமையைப்பிடித்து அவனிடமிருந்து வைரத்தைப் பறிமுதல் செய்து கொண்டு,அவனைக்கடலில் வீசியெறிந்தான். கடைசியில் தன் பெருந்தவறுக்காக தன்னையே தூக்கிலிட்டுக்கொண்டான்.

— ராஜன்

---

## நமது நூல் நிலையம்

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி மஹாகும்பாபிஷேக மலர்.

கொக்குவிலிலுள்ள 'புதுக் கோவில்' என்ற கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி கோவில் 1865-ம் வருடம் முருக பக்தர்களால் கட்டப்பெற்றது. இத்திருக்கோவில் ஸ்தாபிதமாகி 100 வருடங்கள்பூர்த்தியானதை கொண்டாடும் கருத்துடனும் அதிக பணச் செலவில், அதற்குச் சில திருத்தங்கள் செய்து மஹாகும்பாபிஷேகம் நடத்தியதை நினைவு கூரும்பொருட்டும் மேற்படி கோவில்பரிபாலன சபையினர், அழகும் கவர்ச்சியும் மிக்கதோர் இனிய மலரை அச்சிடுவித்து வெளியிட்டுள்ளனர். ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகளின் வாழ்த்துச் செய்தி தாங்கி வெளிவந்த இந்நூலில் தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருமுருக கிருபானந்தவாரியார், சீதாராமசாஸ்திரிகள், புலவர் கருணாலய பாண்டியனார் போன்ற சிவத்தமிழ்ப் பெரியார்களின் தமிழ் கட்டுரைகளும், சுகாதார அமைச்சு நிரந்தரக் காரியதரிசி திரு. சி. பாலசிங்கம், காணி, நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தா, முன்னாள் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. ஹன்டி பேரின்பநாயகம் ஆகியோரின் ஆங்கிலக் கட்டுரைகளும் கவின்பெறத் திகழுகின்றன. மலர் மிருதுவான தாளில் மிகவும் நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது.

— 'ந பா'

### சிறுகதை

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அழிவில் உன் அற்புதமான இருதயத்தையும் என்னேடு பிணைத்து அழித்துக்கொண்டுவிடுவதாய் எனக்கு உத்தேசமில்லை நீ என்னை மன்னித்துவிடவேண்டும்......"

ஃ ஃ ஃ

நிமிர்ந்து விவேகானந்தரைப்பார்த்தேன். அவர் கண்களைப் பார்த்தபடியே சொன்னேன்.

"நீங்கள் சலனமேயில்லாமல் எப்படி வாழ்ந்திருக்கிறீர்கள் என்று இப்போது தான் எனக்குப் புரிகிறது. இலட்சியவாதியின் மனதிலும் ஒரு சமயம் காதல் அரும்புகள் அரும்புகின்றன. ஆனல் அவை ஒரு நிமிடம் மட்டுமே வாழ்கின்றன. அவன் வரையில் காதல் நிமிடப் பூக்கள்தான்-"

அவர் சிரிக்கிருற்போலப் பட்டது.

### வரப்பெற்ருேம்

உலகத்தமிழ்மன்றம், கோலாலம்பூர், மலேசியா.

பிரேரணை பிரேரிப்பவர்: இ. முத்தையன், ஆமோதிப்பவர்: மு. இரத்தினசபாபதி.

1966-ம்ஆண்டுசித்திரைத் திங்களில் கூடும் உலகத் தமிழ் மன்றத்திற்கு திரு. முத்தையன் தமிழ் அரிச்சுவடி கற்பித்தல் பற்றி சமர்ப்பிக்கவிருக்கும் பிரேரணையும் அது பற்றிய குறிப்புகளும் இச்சிறு பிரசுரத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இரத்ததான

# சிறுகதை, கவிதை சுவரொட்டி விளம்பர போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் இரத்ததானச் சங்கத்தின் ஆதரவுடன் 'ஈழநாடு' நடத்திய இரத்ததான சிறுகதை, கவிதை, சுவரொட்டி விளம்பரப்போட்டிகளின் முடிவு இங்கு தரப்படுகிறது.

சிறுகதை, கவிதைப் போட்டிகளில் எழுத்தாளர்களும், கவிஞர்களும் ஆர்வத்துடன் பெருமளவில் கலந்துகொண்டனர். ஐநூற்றுக்கு அதிகமான சிறுகதைகளும் கவிதைகளும் போட்டிக்கு வந்திருந்தமையால் அவற்றைப் பரிசிலனை செய்து தரம் பிரித்து, சிறந்தவைகளைத் தெரிவுசெய்வதில் சிறிது தாமதமேற்பட்டது. போட்டிமுடிவுகள் வருமாறு:-

## சிறுகதை

இரத்ததானச் சிறுகதைப்போட்டிக்கான பரிசுத்தொகை (ரூ. 225)) பத்துச்சிறுகதைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. கதைகளும் அவற்றை எழுதியோரின் பெயர் விபரமும் வருமாறு:-

| கதையின் பெயர் | எழுதியவர் |
|---|---|
| மனிதன் | — யோ. யோன் செல்வராசா |
| யுகதர்மம் | — த. இந்திரலிங்கம் |
| மகா தியாகம் | — மு. கனகராசன் |
| தானம் | — ''யாழ்வாணன்'' |
| பேதங்களைக் கடந்தது | — ''நவாலியூர் நடேசன்'' |
| சாவுமவனைத்தொடுமோ | — ''கார்வண்ணன்'' |
| கர்ப்பச்சிதைவு | — ''மதுமலர்'' |
| கண்கண்ட தெய்வம் | — ''சாணக்கியன்'' |
| நிறைவு | — ''புங்குடுதீவு ராஜன்'' |
| தானம் | — ''வீணைக்கொடியோன்'' |

## கவிதை

இரத்ததானக் கவிதைப் போட்டிக்கு வந்த கவிதைகளில் சிறந்ததென மத்தியஸ்தர்களால் கருதப்பட்ட இரண்டு கவிதைகள் முதலாம், இரண்டாம் பரிசைப்பெறுகின்றன. முதற்பரிசு (ரூ. 100) பெறும் கவிதை: 'தானத்துட் சிறந்தது இரத்ததானம்' எழுதியவர்: ''முருகன்''.

இரண்டாம் பரிசு (ரூ. 75) பெறும் கவிதை: 'குருதிக்கொடை' எழுதியவர்: பொன். சின்.

மூன்றும் பரிசுத்தொகையை (ரூ. 50) பகிர்ந்து கொள்ளும் கவிதைகளும் அவற்றை எழுதியவர்களும்:

| கவிதை | எழுதியவர் |
|---|---|
| கைகள் முன்நீளட்டும் | — க. திருச்செல்வம் |
| இரத்ததான நற்பயன் | — ''மயிலன்'' |
| இரத்ததானம் | — ''அமுது'' |
| இரத்ததானம் பிரதானம் | — திருமதி நாகம்மை ஞானப்பிரகாசம் |
| உலகுக்கு உனதுஇரத்தம் | — ''கட்டுடைக்குமார்'' |
| வானம் உவக்கும் தானம் | — ச. வே. பஞ்சாட்சரம் |
| இரத்ததானம் | — ''திமிலைக்கண்ணன்'' |
| இரத்ததானம் | — ''சிவா'' |
| இரத்ததானம் | — ''சாரதா'' |
| இன்று தலையாய அறம் | — வே. குமாரசாமி |
| ஆழ்ந்திடுமே உன்னுற்துயர் | — ''நிமலன்'' |

இரத்ததான சுவரொட்டி விளம்பரச் சித்திரப் போட்டிக்கு வந்த சித்திரங்களில் முதற்பரிசு பெறத் தகுதியான சித்திரங்கள் இல்லாததினுல் ஆறுதல் பரிசாக இரு பரிசுகள் (ஒவ்வொன்றும் ரூ. 25/) வழங்கப்படுகின்றன. இப்பரிசுகளைப்பெறும் இருவரினதும் பெயர், விபரம் வருமாறு,-

**1. எஸ். சிவப்பிரகாசம்,**
ஓவிய ஆசிரியர்,
யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்

**2. பொ. விசாகப்பெருமாள்,**
நவீல்ட் பாடசாலை, கைதடி

பரிசுபெறும் பதின்மூன்றுகவிதைகளும் 'ஈழநாடு' வாரமலரில் தொடர்ந்து வெளிவரும். சிறுகதைகள், புத்தகவடிவில் இரத்ததான சங்கத்தாரால் அச்சிட்டு வெளியிடப்படும்.

# உங்கள் இராசி பலன்

எழுதுவது

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

[விசுவாவசு வருடம் பங்குனித் திங்கள் 28-ம் நாள் (10-4-66) முதல் பராபவ வருடம் சித்திரைத் திங்கள் 6ம் நாள்(19-4-66) வரையுள்ள பலன்கள்]

### மேட இராசி

இவர்களுக்கு தொழில்மத்திம பலிதம், செய்காரிய நட்டம், புத்திரரால் அதிக செலவு, சயன சுகக்குறைவு, நிலைப்பிரிவு, ஊழியர் உதவி, நண்பர் உதவி, பயனற்ற பிரயாசம், வர்த்தகம், உத்தியோகம், கமம் மத்திமபலன், பெண்களுக்கு நற்பலன்கள் நடக்கும். மாணவருக்கு வித்தை மத்திமம்.

### இடப இராசி

இவர்களுக்கு சத்துருக்கள் வீழ்ச்சி, செய்காரிய சித்தி, புதிய அந்தஸ்து, செலவு அதிகரித்தல், குடும்பசுகம், சயன-போசன சுகம், கமத்தொழில் நன்மை, வர்த்தகம்-- உத்தியோகம்-கல்வியாளர் நன்மைகள், பெண்க்ளுக்கு களத்திர சுகம், பொருள்வரவு-மாதுருவளிஉதவி.

### மிதுன இராசி

இவர்களுக்கு தனதானிய உதவி, கமத்தொழில்வெற்றி குடும்பச்சிறப்பு, பூமிப் பலிதம், வர்த்தகருக்கு பிரயாசம் மிகுதி, பெண்களுக்கு வீண்பழி கேட்டல், விடநீர் பீடை, மாணவருக்கு கல்வித்தடை, உத்திபோகத்தருக்கு நிலைமாற்றம், இனசனவிரோதம்.

### கடக இராசி

இவர்களுக்குஅதிகசெலவு, எதிர்பாராத கஷ்டம், நிலைமையில் மாற்றம், தேக நலிவு, பிரயாணக் கஷ்டம். வர்த்தகருக்கு தொழில்மூல தனமுடக்கம், உத்தியோகத்தருக்கு அதிகாரவிருத்தி, செய்காரியசித்தி, கமத்தொழில்கஷ்டம், இனபந்துக்கள் தொல்லை, அலைச்சல், மாணவருக்கு வித்தை விருத்தி, பெண்களுக்கு நண்பரால் நன்மை.

### சிங்க இராசி

தொழில்கஷ்டம், கொடுக்கல் வாங்கல் பிணக்கு, ரோகபீடை, பிரயாணத்தொல்லைகள், ஆயுத சத்துருபயம், பெண்களால் இடர்கள், உத்தியோகத்தருக்கு புதியநிலை, வர்த்தகருக்கு தொழில் மத்திமபலிதம், கமத் தொழில் பலிதக்குறைவு, பெண்களுக்குச்செல்வச்சிறப்பு, மாணவருக்கு புத்தித்திறமை.

### கன்னி இராசி

இடப்பிரிவு, அலைச்சல், தேகமெலிவு, ஆயுத சத்துரு ரோகபீடை, குடும்பக்கலகம், தாரபுத்திர சுகக்கேடு, வாக்குக்கலகம், உத்தியோகத்தருக்கு செய்தொழில் விருத்தி, வர்த்தருக்குபணவரவு, கமத்தொழில்மத்திமபலிதம் பெண்களுக்கு அவமானம், மாணவருக்குத் தாழ்நிலையேற்படல்.

### துலா இராசி

இவர்களுக்கு செய்தொழில் இலாபம், தனதானிய சேர்க்கை, பூமிப்பலிதம், சத்துரு வெற்றி, புத்திர சுகம், குடும்பத்தில் கலகம், வயிற்றில் ரோகபீடை, வர்த்தகருக்கு செய்காரிய சித்தி, மாணவருக்கு கல்விச்சிறப்பு, உத்தியோகத்தருக்கு சமாதான வாழ்வு, பெண்களுக்கு நண்பர் விரோதம் - அலைச்சல்.

### விருச்சிகஇராசி

இவர்களுக்கு அரச-சத்துரு-ஆயுதபயம். பணமுடை ரோகபீடை, செய்காரியக் கேடு, பிறருக்குக்கட்டுப்படல், பயனற்ற முயற்சி, நண்பர் உதவி, குடும்பத்தில் கலகம், வர்த்தகர்களுக்கு ஊழியர்-பங்காளர் தொல்லை, செலவு அதிகம், உத்தியோகத்தருக்கு அதிகாரிகள் தொல்லை-மனப்பயம்.

### தனு இராசி

இவர்களுக்கு உடல் நலிவு, சத்துரு-ரோகபீடை, தாரபுத்திர சுகக்குறைவு, நீசரால் கஷ்டம், வர்த்தகருக்கு பொருள் முடக்கம், செய்தொழில் பலன் குறைவு, கமத்தொழில் மத்திம பலிதம், உத்தியோகத்தருக்கு சோம்பலால் கேடு, அதிகாரிகள் உதவி, பெண்களுக்கு இனசன மதிப்பு, போசன-சயன சுகம், மாணவருக்கு புதிய வழியில்முன்னேற்றம்.

### மகர இராசி

இவர்களுக்கு குடும்பத்தில் அமைதியின்மை, சத்துரு வெற்றி, தொழிலில்சமசித்தி தனதானிய விருத்தி, உத்தியோகத்தருக்கு இராச சத்துருபயம் அதிகாரிகள்தொல்லைகள், பணமுடை, வர்த்தகருக்கு செய்தொழில்மூல தனமுடக்கம், மாணவருக்கு சுகக்குறைவு, பெண்களுக்கு கோபமிகுதி, அதிகார விருத்தி.

### கும்ப இராசி

இவர்களுக்கு புதிய பதவிகள் ஏற்படல், பணமுடை, செய்தொழிலில் ஏமாற்றம், வாக்கினுல் கலகம், சத்துருபயம், இனபந்துக்கள் விரோதம், உத்தியோகத்தருக்கு அதிகார விருத்தி, நிலைமாற்றம், வர்த்தகருக்கு வஸ்திராபரண லாபம், பெண்களுக்கு இல்லச்சிறப்பு, மாணவருக்கு கல்வி மத்திம பலிதம்.

### மீன இராசி

இவர்களுக்குதேக நலக்கேடு, வயிற்றில்ரோகபீடை, கண்ணில் வருத்தம் காணல், வைத்தியச்செலவு குடுப்பத்திற்கு அதிகரித்தல், இனபந்துக்களால் கவலை, மாணவருக்கு புத்திக்குறை, பெண்களுக்குதேக நலிவு, யோசனை மிகுதி, வர்த்தகருக்கு தொழிற்தடை, பணமுடக்கம், உத்தியோகத்தருக்கு அச்சம், ஆயுதபீடை.

# இரத்ததானம் ஒரு சமூகப்பணி

(I-ம் பக்கத் தொடர்ச்சி)

புச்சத்துள்ள ''ஹீமோகுளோபின்'' செவ்வணுக்களில் அடங்கியிருக்கின்றது. இதுவே இரத்தத்திற்கு அதன் நிறத்தைக்கொடுக்கிறது. பிராணவாயு ஹீமோகுளோபினில் கலந்தே உடலின் பல பாகங்களுக்கும் கொண்டுசெல்லப் படுகின்றது. சாதாரணமாக தேகாரோக்கியமுள்ள மனிதனின் இரத்தத்தில் 80 வீதம் ஹீமோகுளோபின் இருக்கும்.

சாதாரணமாக 150 இருத்தல் நிறையுள்ளவனிடம் சுமார் 15 போத்தல் இரத்தம் இருக்கும்.

எக்காரணங்களினுல் இரத்தத்தை இழந்தால் இரத்தப் பிரயோகம் செய்யவேண்டி நேரிடும்?

1. பெரிய விபத்தின் போது இரத்தமிழந்த பின்னும்;

2. பிரசவத்தின்பின் சில சமயங்களில் ஏற்படும் அதிக இரத்தப்பெருக்கின் பின்னும்;

3. கர்ப்பச்சிதைவு காரணமாக ஏற்படும் இரத்தப் பெருக்கின் பின்னும்;

4. கடும் நெருப்புக்காயத்தின் பின் காயங்களிலிருந்து அதிக ஊனம்வடிவதனுலும்;

5. சத்திர சிகிச்சையின் போதும்;

6. இரத்தச்சோகையினுல் ஏற்படும் இரத்தக்குறைவை நிவிர்த்தியாக்கவும்;

ஒருவருக்கு இரத்தம் அளிக்கவேண்டிய தேவை ஏற்படின். இரத்தம் இழந்தவருக்கு இரத்தத்தையே அளிக்க வேண்டும். இத்தறுவாயில் இதுவே தனிச் சிகிச்சையாகும். இதுவே உயிர் கொடுக்கும் சிகிச்சை.

18 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட தேகாரோக்கியமுள்ள, கயரோகம், நெருப்புக் காய்ச்சல், செங்கமாரி, மலேரியா, மேகரோகம் ஆகிய நோய்களாற் பீடிக்கப்படாத ஆண்களும், பெண்களும் இரத்ததானம் செய்யலாம்.

ஒருவர் மூன்று மாதத்துக்கொருமுறை இரத்ததானம் செய்யலாம்.

இரத்ததானம் செய்வதனுல் ஒருவருக்கு யாதொரு தீங்கும் ஏற்படுவதில்லை.

இரத்ததானம் செய்பவர்கள் இரத்தத்தை இழப்பதனுல் தாம் தமக்குப் புதிய இரத்தத்தை உண்டுபண்ணிக்கொள்வதுமன்றி இரத்தம் உண்டுபண்ணும் உறுப்புக்களுக்கும் அப்பியாசத்தையும் அளிப்பதனுல் உடலைப் பொதுவாகச் சீர்படுத்திக் கொள்ளுகின்றனர்.

இரத்ததானம் செய்ய விரும்புவோர்க்கு வைத்திய பரிசோதனை செய்யப்படும். அப்பொழுது நோய் ஏதாவது காணப்பட்டால் அதற்குத் தகுந்த சிகிச்சையும் அளிக்கப்படும்.

இரத்ததானம் செய்பவர்கள் சாதாரண உணவை உண்டுவந்தாலே தாம் இழந்த இரத்தத்தை இரண்டு கிழமைகளுக்குள் திரும்பவும் பெற்றுக்கொள்ளுகின்றனர்.

யாழ்ப்பாண வைத்திய சாலையில் தினமும் சராசரி 20 போத்தல் இரத்தம் வைத்திய சிகிச்சைக்குத் தேவைப்படுகிறது.

இரத்ததானம் செய்ய விரும்புவோர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குச் சென்று காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் இரத்ததானம் செய்யலாம். அன்றேல்,

இருபத்தைந்துக்குக் குறையாத ஒரு குழுவினர் ஒரு குறித்த இடத்தில் இரத்ததானஞ் செய்ய விரும்பி இரத்த வங்கி வைத்திய அதிகாரிக்கு அறிவித்தால் அவர் அவ்விடத்துக்கு வந்து இரத்தத்தை எடுப்பார்.

இரத்ததானம் செய்யும் ஒவ்வொருவருக்கும் 10 ரூபா சன்மானம் உடனே அளிக்கப்படும்.

நாள்தோறும் வைத்திய சாலையில் தேவைப்படும் இரத்தத்தை நாம் எம்மக்களிடமிருந்தே பெறவேண்டியிருக்கின்றது. ஆயிரக்கணக்கான நோயாளிகள், தேகாரோக்கியம் பெற்ற நீங்கள், தமது பிணியை நீக்குவீர்களென எதிர்பார்க்கின்றனர்.

நீங்கள் கொடுக்கும் இரத்தம்: அனுதையாகவிருக்கும் பிள்ளையின் தாயின் உயிரைப் பாதுகாக்கக் கூடும்.

அன்றேல் இயமனுடன் போராடிக் கொண்டிருக்கும் கணவனது உயிரைக் காத்து மங்கைக்கு மாங்கல்யப் பிச்சை கொடுக்கக் கூடும்.

ஆகையினுலே உங்கள் அயலவன் வாழ, உங்கள் இனம் வாழ-

''செய்யாமற் செய்த
உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றலரிது''

என்ற வள்ளுவன் கூற்றிற்கிசைய இரத்ததானம் செய்து தேசியப் பணிபுரிவீர்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org